ங்க வெளியீடு—க.

57

உ

சிவமயம்.

# துளுவ வேளாளர் வரலாறு.

மதுரை,

துளுவ வேளாளர் மகாஜன சங்கம்

அமைப்பாளர்,

ராம. மா. இராமையா பிள்ளை

எழுதியது.

ராஜா பிரஸ், மதுரை.

1934.

ஸ்ரீமுக ஆண்டு. [அணா 6.

உ

சிவமயம்.

# துளுவ வேளாளர் வரலாறு.

மதுரை துளுவ வேளாளர் மகாஜன சங்கம்

அமைப்பாளர்.

ராம. மா. இராமையா பிள்ளை எழுதியது.

867

ஸ்ரீமுக ஆண்டு

லை ] 1933. [ அணா 6.

44395

M. I. P. PROJECT
Microfilmed

Printed at
Raja Press, Madura:-33.

முருகன் துணை.

திருக்கோவலூர் ஸ்ரீபாணிபாத்திர தேசிக ராதீன
கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக சிவாசாரியாரவர்கள்
குமாரரும் துளுவ வேளாளகுல திலகரும்
திண்டிவனம் உயர்தர பாடசாலைத்
தலைமைத் தமிழாசிரியருமான வித்வான்
உயர் திருவாளர்

# பழநிஸ்வாமி சிவாசாரியாரவர்கள்

இயற்றிய சாற்றுக்கவி.

எழுசீர் விருத்தம்.

துதிபூத்த நறுங்கொன்றைச் சடைமகுடப் பரமனுமெம்
பராசத்தித் தோகையாரும்
கதிபூத்த மனுகுலத்துக் கதிர்பூத்துத் தழைத்திடத்தங்
கருணைநதி சுரந்துபாய்ச்ச
மதிபூத்த தம்மரபுந் தம்மொழியுந் தந்நாடுந்
துளுவமென மலரவேளாண்
நிதிபூத்த தகவுடைய நிமலகுணத் தவரன்றே
துளுவரென நிகழ்த்து மேலோர்.

மேம்படுமக் குலப்பெருமைச் சுடர்கொளுத்தி யகவிருளை
யோட்டுதற்கு விளக்கமாகத்
தேம்படுதண் மொழிசெறியத் துளுவவே ளாளர்வர
லாறுமிகத் திகழ்யாத் தான்
தீம்படுநற் பேர்மதுரைத் துளுவவே ளாளர்பெருஞ்
சங்கத்தைச் சிறப்பாய் நாட்டி
வேம்படுவெவ் வுரையரையும் வயங்கொளும்இ ராமையாப்
பிள்ளையெனும் வேளே கண்டீர்.

கண்கவரும் வனப்புடைய நூலிதனிற் கரைசெயற்கிங்
கரிதான காலத்துற்ற
உண்மைகளு முயர்சாச னம்பலவு முரைக்கின்ற
உறுதிகளு முயர்வுபூண்ட
திண்மைபெறுஞ் செழுநடையும் பெருங்குரவ ரிருக்கைகளு
மைங்கரத்துத் தேவின்சீரும்
வண்மைபெற விளங்குவத னலிதனை யெழிற்றுளுவ
ரெல்லீரும் வாங்கிக் கற்பீர்.

## சேலம் துளுவ வேளாண்குல பட்டக்காரரும்
## பட்டக்கார் அச்சியந்திரசாலை உரிமையாளருமான
## உயர்திருவாளர் பட்டக்கார்,
# S. M. நாராயணசாமி பிள்ளை,
## அவர்களியற்றியது.

(சாற்றுக்கவி.)

வெள்ளிமலை யெமதுபிரான் ருத்திரசா முண்டியெழின்
பேனி நோக்கத்
துள்ளியெழு மானந்தத் துளியின்க ணுதித்திடலாற்
றுளுவ வேளாண்
வள்ளலென மகிதலத்தில் வந்தபெருமேன்மக்கள்
வரலா றெல்லாம்
உள்ளமுவந் தன்றுமுத லின்றுவரைக் கண்டநிலை
யுரைத் தானன்றே.

பேர்துளுவ மூர்துவரைக் கேதாரங் காளிந்திப்
பெற்ற மாலைத்
தார்குவளை வீரமுர செழின்மேழிக் கொடியாழித்
தாங்கி யார்ந்த
வூர்கிரி மாவரசா யோங்கபுவி மீதென்றவ்
வுமைம ணாளன்
சீர்வளத்தி னலமனைத்து முதவியெமை விடுத்தனெனத்
தெரிந்த தன்றே.

தோன்றியது கயிலாயங் காணிபுவி வடபாற்பேர்
துளுவ வேளென்
றான்றியபின் தென்னாட்டி னெல்லைகீழ் விருதுநகர்
உத்த ரந்தான்
தேன்றிகழும் பழனிமலை வுத்தமபா ளயமேற்பால்
தென்பனையூர்
ஆன்றபதி நாப்பணாற் பத்திரண் டூர்துளுவமென்
றறிந்த வாறே.

தானறிந்து தன்துளுவ வேண்மரபுக் குதவுபெருந்
தகைமை யானோன்
மீனவிழிச் செங்கமலி நிலையுடையான் கலைமிகுத்த
மேன்மையாளன்
கோனகரிச் சொக்கேசர் மீனாட்சி யாண்மாடங்
கொண்டகூடன்
மானகரி ராமய்ய வேளிந்த நூலெழுதி
வைத்த தாமால்.

உ

மார்த்தாண்டம்பட்டி துளுவ வேளாளகுல திலகம்
உயர்திரு. வேலாயுதம் பிள்ளையவர்கள் குமாரரும்
தமிழ் வித்துவானுமாகிய, மதுரை உயர்திருவாளர்

## வேலாயுதம் பிள்ளையவர்களியற்றிய

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

மதிதவழு மணிமாட கூடகோபுரமின மணிகொழித்திடு
வைவையும்
வாளைமீன் குருவமுக் கனிரசத்தேன் பாயவள
மருவுகழனி யழகும்
துதிபரவு மினியசெந் தமிழ்மணமு முளமதுரைச் சுபன்மாரி
முத்து துரைவேள்
துய்யதிரு மாதை மெய்யாக வஞ்சலி செய்ததுசுடர்
தவத்தி னலனால்

மதியிலுயர் புதனென்ன வந்துதித்திடு மிராமைய
மாலென்னு மகிபன்
மாட்சிசா லுந்துளுவ வேளாளர் சரிதமொடுமன்னு
சாசனமகிமையும்
நதியுலவு வேணியன் சுதனான மாகத விநாயகனை
நமர்பெற்ற நூலும்
நலமாய்த் துலக்கினன் கலைவாணி யாசிசொல
நாவலர் மதிக்கமாதோ.

---

ஜமீன் பேரையூர் துளுவ வேளாளகுல திலகரும்
தமிழ் வித்வானுமாகிய உயர்திருவாளர்,

## ப. பெரியசாமி பிள்ளையவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

---

சீர்பூத்த துளுவ வேளாளர்குல வாலாற்றுச் சிறப்பை யெல்லாம்
ஏர் பூத்த பன்னூலா தாரவாலு மூதறிஞ ரினிதாய்ச் செய்த
நேர்பூத்த செப்புப்பட்டயத்தாலும் விளக்கி யெலாம் நேர்த்தி யாக
வார் பூத்த இராமையா வச்சியற்றி யாவருக்கும் வழங்கினனே.

---



ராம. மா. இராமையா பிள்ளை.

உ

கணபதி துணை.

# முன்னுரை.

அலைகடல் சூழ்புவி அனைத்தினும் இதுபோது சற்றேறக் குறைய 190-கோடி மக்கள் வாழ்க்கையிலீடுபட்டு வாழ்கின்றன ரெனக் கூறுகின்றனர். இவை அளவிலா அண்டங்களையும் பொருள் களையும் உயிர்களையும் ஆக்கி அளித்துத் துடைத்து மறைத்து அரு ளும் வல்லகர்த்தா ஒருவர் படைப்புக்குட்பட்டதாயிருந்தும் நான்கு வகுப்பும் அதில் பல பிரிவும் ஏற்றத்தாழ்வும் அதனால் மனமாற்றங் களும் கொண்டு வாழ்வது இமயமுதல் குமரி வரையுள்ள இந்நாட்டி லல்லாது மற்றைத் தேயங்களிலில்லையென்பதை உலகின் பல பாகங் களைச் சிறிது நோக்கியவர்களுங்கூட அறிவர்.

ஆறறிவுப் பிறவியாம். மக்கள் குழுவினர் அன்புடைமைகொண்டு அளவளாவி ஒற்றுமையுடன் வாழ்வதற்கு இந்நாட்டிலுள்ள வகுப் புப் பாகுபாடுகள் ஏற்றதல்லாதனவாயிருக்க வகுப்பைப்பற்றிய வர லாறுகளும் ஆராய்ச்சி விளக்கங்களும் வேண்டுவதில்லையேயெனின், ஏதாவதொன்றைக் கற்பனையென்று ஆராய்ச்சியில் முடிவுகட்டி அதனை அறவே ஒதுக்கித்தள்ளும்வரை நாம் எந்த முறையில் எந்த அளவில் உபயோகப்படுத்திக்கொள்ளத் தேவையோ அந்த அளவில் அதனைக் கையாண்டுவரலாம் என்ற சில அறிஞர்கள் கருத்துக் கிணங் கவும், நமது வரலாறு வேண்டும் எனக் கேட்ட பல நண்பர்கள் விருப் பத்துக்கிணங்கவும் நமது வாலாறு என்பதைத் தெரிந்த அளவில் சுருக்கமாகக்கூற முன்வந்துள்ளேன். குறைகள் பல விருக்கலாம் அறிஞர்கள் பொருத்து, பொருத்தமுள்ள விரிவான விபரங்களிருந் தறிவிப்பின் பிந்திய வெளியீட்டில் திருத்திக்கொள்ள விருப்பமுடைய வனகயிருக்கிறேனென்பதைப்பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

குல வரலாற்றையும் கி. பி. 1920 இரௌத்திரி ஆண்டு சித்திரைத் திங்கள் 26-ம் நாள் ஜமீன் பேரையூரில்கூடிய 42-ஊர் உறவின் முறைப் பெரிய கூட்டத்தில் நமது வரலாறு என்பதுபற்றி நாம் கூறியுள்ளதையே சில திருத்தங்களுடன் பதிப்பித்திருப்பதுடன் ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னரும் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னரும் நம் முன்னோர்களான பழநியிலுள்ள நமது கவிராயர் பெருமக்களால் அமைத்துள்ள மடாலயங்களுக்கு ஏற்பட்ட செப்பேட்டுப் பட்டயங்கள் இரண்டிலுள்ள விபரங்களையும் அப்படியே இதனில் சேர்த்துப் பதிப்பித்திருக்கிறேன்.

மேலும் நமது மரபிலுதித்த அறிஞர் பெருமக்களான புகழேந்திப் புலவர், படிக்காசுத்தம்பிரான், வாலசுப்பிரமணியக் கவிராயர் இன்னும் புலவர் பெருமக்கள் சரித்திரங்களையும், பாடல்களில் சிலவற்றையும் வீரத்துடனும் புகழுடனும் அறங்கள் பல புரிந்து சிறப்புடனும் வாழ்ந்த பெரியார்கள் சரித்திரங்களையும் நமது மரபினர்கள் ஆங்காங்கு அமைத்துள்ள பொது நிலையங்களின் விபரங்களையும் வேறு புத்தகமாக வெளியிட நினைந்துள்ளேன். திருவருட்டுணை கூட்டுவிக்கும் அதனையும் நமது அறிஞர் பெருமக்கள் ஆதரிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஸ்ரீமுக ஆண்டு.
கி. பி. 1933.

ராம. மா. இராமையா பிள்ளை,
மதுரை.

உ

# துளுவ வேளாளர் வரலாறு.

## வணக்கம்.

வித்தாகி மூளையாகி விளைவதாகி விளைவிக்கும் பொருளாகி மேலுமாகிக்
கொத்தாகிப் பயனாகிக் கொள்வோனாகிக் குறைவாகி நிறைவாகிக் குறைவிலாத
சத்தாகிச் சித்தாகி யின்பமாகிச் சதாநிலையா யெவ்வுயிர்க்குஞ் சாக்ஷியாகி
முத்தாகி மாணிக்கமாகித் தெய்வ முழுவயிரத் தனிமணியாய் முளைத்த தேவே.

(வள்ளலார்.)

## 42-ஊர் உறவின்முறையென்பது.

பாண்டிய நாட்டில் கரிவலம்வந்தநல்லூர் பனையூரைத் தெற்கு எல்லையாகவும், விருதுபட்டி குல்லூர் சந்தையைக் கிழக்கு எல்லையாகவும், உத்தமபாளையத்தை மேற்கு எல்லையாகவும், பழநியம்பதியை வடக்கு எல்லையாகவும் கொண்டு இதனுள் நாற்பத்திரண்டு ஊர்களில் வசித்து * 42-ஊர் உறவின் முறையாரெனப் பெயர்கொண்டு நாட்டாண்மை ஒருவர், சூரிகள் பன்னிருவர், தண்டல் ஒருவர் இத்தகைய அதிகாரப் பதவிகளும் அமைத்து பொது நிலையங்கள், கோவில்கள் இவைகளின் பாதுகாப்புக்காகத் தலைக்கட்டுவரி, கல்யாணவரி முதலியவைகள் ஏற்படுத்தி அந்தந்த ஊர் உறவின்முறையிலேற்படும் வழக்குகளை அந்தந்த ஊர் உறவின்முறையிலேயே தீர்த்துக்கொள்வதுடன் அதனில் முடிவுபெறாத வழக்குகளுக்கும் பொதுக் காரியங்களுக்கும் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறையும் அவசர

---

* கி. பி. 1919-ல் 42-ஊர் துளுவ வேளாள வாலிபர் சங்கமெனவும் 1924-ல் 42-ஊர் துளுவ வேளாளர் சங்கமெனவும் கொண்டு பல பிரசுரங்கள் வெளிவந்திருக்கின்றன. குரோதன தைத்திங்கள் வெளியீட்டில் சிறிது விளக்கமாகக் காணலாம்.

நிமித்தமாகவும் † திருவண்ணாமலை, திருப்பரங்குன்றம் மடாலயங்களி லும் விருதுபட்டி நமது நந்தவனத்திலும் 42-ஊர் உறவின்முறைப் பெரிய கூட்டம் கூடி முடிவுசெய்தும் மாறுபட்டவர்களுக்குக் கால வரையரை கொடுத்தும் கட்டுப்படாவிடில் புறம்பாக ஒதுக்கியும் அதற்குப் பெற்ரூரும், உடன் பிறந்தாரும் மற்றும் எல்லா உறவின் முறையும் கட்டுப்பட்டு ஒற்றுமையுடனும் அன்புடனும் வாழ்ந்து வந்த- வருகிற உறவின்முறையாகும். இப்பெரிய கூட்டம் இரௌத் திரி சித்திரை 26-ம் நாள் ஜமீன் பேரையூரில் கூடியபோது நான் ‡ அருப்புக்கோட்டையில் வதிந்த காலத்தில் அக்கூட்டத்திற்குச் சென்று குல வரலாறு பற்றி கூறியுள்ள கருத்துக்களையே சில விரி வான விளக்கங்களுடன் விவரித்துள்ளேன்.

## குல வரலாறு.

எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள் படைக்கும்போது ஜாதி பேதங்களை யுண்டாக்கியிருக்கமாட்டாரென்று ஒருதுணிவாய்க் கொள்ளவேண்டியதுண்மையே யானும் பூமியை ஐந்து நிலங்க ளாக வகுத்து அதில் வாழ்வதைக்கொண்டு குரிஞ்சிநில மக்கள், முல்லைநில மக்கள், மருதநில மக்கள், நெய்தநில மக்கள், பாலைநில மக்கள் என இருந்தவை, பின்னல்

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்
சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையால்

என்பதற்கிணங்க, மக்கள் தொழில்புரிவதைக்கொண்டு பதினெண் வகுப்பாகப் பிரிக்கப்பட்டதென்று பழந்தமிழ் நூலும், பிரம்மாவின் தலை, தோள், தொடை, கால் இந்த அவயவங்களிலிருந்து நாலு ஜாதி யாகப் பிறந்தார்களென்று ஆரிய வழக்கைத்தழுவிய நூல்களுங் கூறுகிறதாக வறிகின்ரேம். அதில் இன்ன வருணத்து ஆடவனுக் கும், இன்ன வருணத்துப் பெண்ணுக்கும் பிறந்தவன் இன்ன குல

---

† திருவண்ணாமலை ஸ்ரீவில்லிபுத்தூருக்கு வடபாலுள்ளது. திருநாம மலையென்றுங் கூறுவர்.

‡ அருப்புக்கோட்டையில் பிற்காலங் குடியேறியதால் நான்கெல்லையில் குறிக்கப்படவில்லை.

மென்றும், இன்ன இருடிகள் கோத்திரமென்றும் அதிலும் பிரிவுகள் அதிகமேற்பட்டு பல ஜாதிப்பிரிவுகளிருப்பதாகக் காணக்கிடக்கின் றன. ஆனால் இப்போதுள்ள ஆங்கில ஆட்சியில் ஜாதிப்பிரிவுகளில்லா மல் எல்லாம் சமமாக ஆக்கிவிடப்படுமோவென்று தற்போது நடக் கும் நிலைமையாலும் முயற்சியாலும் எண்ணப்பட்டாலும் மக்கள் இன்ப வாழ்விற்கு வேண்டத்தக்கதான அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு பொருளையும் பெற, பேதமற்ற வகுப்புப் பிரிவு களின் சட்ட திட்டங்களால் அறம் முதலிய நீதிகள் சரியாய்க் காக்கப் பட்டுவருமென்று ஆன்றோருணர்ந்து அமைத்துள்ளதை இந்நாடு கையாண்டு வந்தது. அங்ஙனம் கையாண்டு வந்ததில் எல்லா மக்க ளும் உடன்பிறந்தார்போன்று ஒற்றுமையுடன் வாழ்ந்துவந்ததை விட்டு அந்த வகுப்புப்பிரிவையே பேதப்படுத்தி ஏற்றத்தாழ்வுடைய ஜாதியென நூல்கள்மூலமும் கூறி, இதுபோது அளவுகடந்த பேதம் பாராட்டிக் கெட்டுவிட்டது. ஆனாலும் இந்தியாவில் 32-கோடி (இப்போது 35-கோடி) மக்களில் மகம்மதியர்கள், கிறிஸ்தவர்கள் முதலிய பிற மதஸ்தர்கள் 10-கோடி (12 கோடி) நீங்கலாக இந்தியர் கள் 22-கோடி (23-கோடி) யிருக்கும். இதில் ஏற்றத்தாழ்வுடன் ஜாதிகளிருக்கவேண்டுமென்று விரும்புகிறவர்களொருபுரமிருக்கட்டும். ஏற்றத்தாழ்வின்றிச் சமரசத்துடன் ஜாதிப்பிரிவுக ளிருக்கவேண்டு மென்று விரும்புபவர்கள் பலரிருந்தாலும் ஜாதியை அடியோடழித்து விடவேண்டுமென்று விரும்புபவர்கள் இதுபோது சிலரேயாவர். இத னால் ஜாதிப்பிரிவுகள், இன்றைய நிலைமையை நோக்கும்போது பூரு வும் அழிந்துவிடாதென்று நினைக்கிறேன். குலவரலாற்றினை எனது செயலுக்கெட்டியவரை தெரிந்துகொண்டதைக் கூறுவதில் பெரி யோர்கள் நீரோடு கலந்த பாலைப் பிரித்துண்ணும் அன்னம்போன்று குணத்தை ஏற்றுக் குறைகளைத் திருத்துமாறு வேண்டுகின்றேன்.

மேற்கூறியபடி படைப்பில் ஜாதிப்பிரிவுகள் உண்டாகியிருக்க மாட்டாதென்று கூறும்போது பிற்கால உற்பத்தியென்றுதான் கொள்ளவேண்டியதிருக்கிறது. அங்ஙனம் உற்பத்தியானபோது தான் அதற்கான வழிமுறைகளைப்பற்றிய சரித்திரவரலாறுகள் அமைத் திருக்கவேண்டும். அந்த முறையிலேயே ஒவ்வொரு ஜாதியார்களுக்

கும் புராணங்களும் சரிதைகளும் இருக்கின்றன. உண்மை எவ்வாறிருப்பினும் இதில் எந்த வகுப்பைப்பற்றிய சரித்திர வாலாறுகளைப் பார்த்தாலும் தெய்வத்தின் உற்பத்தியென்றோ, இருடிகள் வழியென்றோ கூறிப் பெருமையுடன் வாழ்ந்துவந்ததைப் பாராட்டிக் கூறிக்கொண்டுபோவதல்லால், குறைந்த நிலையிலுள்ளதாக எந்த வகுப்பைப்பற்றிய புராணங்களிலு மிருக்கவேமாட்டாது. ஏனைய பிறவிகள்போலல்லாது உயர்ந்த மக்கட்பிறப்பாய்ப் பிறந்த பெருமையுடைய மக்கள் பெருமையை விரும்புமனத்துடையவர்களாயிருத்தல் இயற்கையேயாகும்.

ஒன்றுபட்ட அன்புடைய மக்களிடத்து ஆரிய வழக்குப் புகுந்து பேதம்பாராட்டத் தலைப்பட்ட பின்னர் ஒரு வகுப்பார்மேல் ஒரு வகுப்பார்கொண்ட துவேஷங்காரணமாகத் தங்கள் தங்கள் நூல்களில் பிறரைக் குறைபடக்கூறியும், பொது நூல்களில் சந்தர்ப்பமுள்ள இடங்களில் குறைவுபடப் புகுத்தியும், அதனைத் தங்கள் செல்வாக்கைக்கொண்டு பரப்பியும் தர்க்கமிட்டு வாதித்தும் குழப்பமான நிலைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதென்றே ஆராய்ந்து நோக்கியவிடத்தில் அநுமானிக்கவேண்டியதிருக்கிறது.

இங்ஙனம் ஜாதி சம்மந்தமான விளக்கங்களையும் பிறர் கூறியதற்கு மறுப்புகளும் எழுதிய புத்தகங்களைப் பார்த்தால் நகைப்பிற்கிடமேயாகின்றன. புராணங்களிலும், காவியங்களிலும் மற்றும் நூல்களிலும் பதமாற்றம், செய்யுள் மாற்றம், இடைச்சொருகு, புதிய கற்பனைகளைச்செய்து கெடுத்துவிட்டார்கள் என்றும் அதற்குச் செய்யுள் வேறு, இதற்கு இன்னவிடத்தில் இன்ன பதமிருந்தது இந்தச் செய்யுளே மாற்றம், இந்தக் கதை புதிதாகக் கட்டியது, இது சொல் வழு, இது இலக்கண வழு, இது கால வழு என மிக விரித்துக்கொண்டுபோகிறார்கள். இதனில் பிறர் கெடுத்துவிட்டார்களென்று கூறுகிற தாமும் செய்யுட்களில் பதத்தை மாற்றியும் புதிதாகக் கவிகளைக் கட்டியும் இவை பெரியோர்கள் சொன்னது, இது கேள்வி, இந்தச் சரித்திரமே பொய், இந்த நூல் இந்தப் புலவர் பாடினதேயில்லை என அழுக்காறுகொண்ட மனதுடையவர்களாய்த் தாங்கள் எடுத்துக்கொண்டதற்கிணங்கப் பொருந்தியும் பொருந்தாமலும் தக்கவிதமா யெழுதிக்கொண்டுபோகிறார்கள். இதனை நோக்

கும்போது அவருக்குப் பேசத்தெரியாது நான் நன்ருய் உளறுவேன் என்பதைப்போன்றதல்லாது வேறல்ல. அல்லாமலும் உலகில் எல்லா மக்களும் நான்கு ஜாதிக்குட்பட்டவர்களே யல்லாமல் வேறில்லை யென்று சொல்லிக்கொண்டே தங்கள் மரபு அந்நான்கிற்குட்பட்ட தல்லவென்றும் தெய்வ வழியென்றும் நான்கு ஜாதிகளுக்குரிய தொழில்களுமுண்டென்றும் கூறிக்கொண்டுபோகிருர்கள். இப்பேத மான வழி விரிந்த அறிவும் பரந்த நோக்கமும் பெருங்கருணையும் அன்புடைமையுங்கொண்ட பேரறிவாளர் கூட்டத்தில் ஏற்குந்தன்மை யதில்லையாதலால் நம்முடைய மனத்தையும் அத்துறையில் செலுத் தாது, நாமும் குறைத்தோ மிகுதிப்படுத்தியோ கூருமல் உள்ளபடி தெரிந்த அளவில் நமக்குள்ள ஆதாரத்தைக்கொண்டு சொல்லப் புகு கின்ருேம்.

## உற்பத்தி.

முன்ஞெரு காலத்தில் கயிலையில் ருத்திரசாமுண்டீஸ்வரருக்கும் ருத்திரசாமுண்டியம்மைக்கும் நேர்ந்த களியாட்டத்தில் ஈசுவரர் அம் மையைப்பார்க்க, அம்மையார்க்கு மயிர்க் குச்சிலிர்த்து வேர்க்க அதனை முறையே இருபுறத்தோளிலிருந்தும் வழித்துத்தெரிக்க, அது ஆண் பெண் உருக்கொண்டெழ, வியர்வைத்துளியால் வந்ததுபற்றி அவர்களுக்கு துளுவ வேளாளர் என்று நாமஞ்சூட்டி குடை, விருது, மேழிக்கொடி முதலிய அரசாட்சிக்குரிய கருவிகளைக் கொடுத்து அனுப்பிவந்த பிரகாரம் வடகேதாரபர்வதம் அண்மையில் துளுவ நாட்டை யுண்டாக்கி அதில் வாழ்ந்து கிளை பெருகிவந்ததாக 500-ஆண்டுகளுக்கு முன் அதாவது கலியுகாதி 4515 விசுவாவசுவூ வைகாசிமீ 15வ. சுக்கிரவாரம் பிறந்த பழநி மடாலயப் பட்டயத்தில் காண்கின்ருேம்.

*ஆதிசங்கரர் காலத்தில் சகல ஜாதிகளின் விர்த்தாந்தங்களும் காஞ்சி ஏகாம்பரர் சன்னிதியிலெழுதப்பட்டதென்று கூறப்படுகின்

* ஆதிசங்கரர் காலம் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் காலத்துக்குப் பிற்பட்டதாகும். நீலகண்ட சிவாச்சாரியார் காலமும் சங்கரர் காலமேயாகும். இராமாநுஜாச்சாரியார், மாத்வாச்சாரியார் காலம் அதற்குப் பிற்பட்டதாகும். ஆதிசங்கரர் காலம் இற்றைக்கு முன் 1100 ஆண்டுகளாகும்.

றது. துளுவநாடு கன்னட தேசத்தின் வடபாலுள்ளது. கன்னட தேசம் மைசூர் இராஜ்யமாகும். துளுவ பாஷையும் உண்டு. அங்கிருந்து வெவ்வேறு காலங்களில் பல இடங்களுக்கும் சென்று குடியேறியிருக்கிறார்கள். 300-ஆண்டுகளுக்கு முன்னுள்ள பழநி நமது புலவர்பெருமான் வாலசுப்பிரமணியக் கவிராயர் இயற்றிய பாஞ்சராத்திரமதசபேடிகை, அக்க தீபிகை, சைவ சித்தாந்தம், மாயாவாத சகசிரதூஷணி, குகோத்கர்ஷம், கூவிளநீப மகாத்மியம், பழநித் தல புராணம், கந்தப்புராணக்கீர்த்தனை இவைகளில் பழநித்தலபுராணத்தில் இயாழ்ப்பாணம் மகாவித்வான் நா. கதிரைவேற்பிள்ளையவர்கள் எழுதிய முகவுரையில் இளந்திரையன் என்னும் ஆதொண்டைச் சக்கரவர்த்தியால் குடியேற்றப்பட்டவர்களென்று கூறப்பட்டிருக்கிறது. அன்றியும் திருவிளையாடற்புராணம் சிறப்புப்பாயிரத்தில், திரிசிரபுரம் உயர் திரு கோ. நாராயணசாமி பிள்ளையவர்கள் சென்னை, திருமயிலை, தொண்டைமண்டலம் துளுவ வேளாள நாட்டாண்மை உயர்திரு. முத்தியப்ப முதலியார் மரபைக் கூறிவருவதில்:...........குலாவுதண் கங்கை குலத்தினிலுதித்த மாபாளன்றனை.........என்பதற்கிணங்க கங்கை புதல்வனுய்த் தோன்றி நிலத்திடைவந்து காஞ்சியையடைந்து பலவளங்களுடன் வாழ்ந்துவருங்கால்,...........

கற்புறுமை செய்கச்சி யிற்றவத்தைப்
பொற்புடன் காவல் பூண்டமை யதனுல்
கச்சி காவலரெனுங் கன்னி மாவலரெனும்
உச்சிதமான வுயர்ச்சியும் பெற்றே
அங்குறை காளி அருளுடன் மகிழ்ந்து
செங்கு வளைத்தார் சிறப்புட னளிக்க
உமையுடன் கைலை யுற்றா னருகே
அமைவுட னிருக்க ஆங்கவ ரருளால்
கடுக்கையு முருத்திர சாதன கவசம்
அடுக்குல பூபதி ஆன்கொடி யளவில்
விருதுகள் கொடுக்க வேண்டிய பெற்றுப்
பருப்பத குமரிதன் பாகனை வணங்க
அவரவர் மண்டலத் தகலுமென் றருளத்

தவறிலா விடையெனத் தரைமிசை வந்து
முக்கணுன் கயிலை முதற்கண நாதன்
மிக்க தொண்டினை விரும்பியாண் டதனல்
தொண்டை நாட்டிற் றுலங்கிய சின்னுள்
தண்டகன் காக்கத் தவறிலா தவன்பேர்
கொண்டன தண்டக மண்டல மெனவும்
ஆண்டவவ் வரக்கன் ஆரியன் றனக்கே
ஈண்டிய தீமை யிழைக்க முனிந்தவர்
காஞ்சிர மலிந்த காடாய்ச் சபிக்க
வாஞ்சைவிட் டந்நகர் வாழ்க்கையை நீங்கி
நலந்திகழ் துளுவ நாட்டிடைச் சென்று
கலந்தவ ருடனே காணியாண் டிருக்கச்
சுக்கிர னறைந்த சூளகன் றமையால்
தக்கநல் வேளாளர் தங்களைத் தேடி
ஆதொண்டைச் சோழ னழைக்கத் தொல்காணி
மாதண் டகத்தை வந்துகாத் தாண்டார்
அன்பொடு துளுவநா டாண்டுவந் தமையால்
இன்பொடு துளுவவே ளனப்பெயர் பெற்ருர்,

எனக் கூறியிருக்கிறுர்கள். இஃது வேளாள புராணத்தைத் தழுவிய தாகும். வேளாள புராணத்தில் மாபாளன் பிறப்பையும் கீழே குறித்திருக்கிறேம்.

## காலமும், மொழியும்.

குடியேற்றப்பட்ட காலத்தை நாம் இப்போது இவ்வளவென்று கூற இயலவில்லை. 500 ஆண்டுகளுக்குமுன் பழநிப் பட்டயமும், 700 ஆண்டுகளுக்கு முன் மலையாளத்தில் (கோட்டாரில்) சிலாசாசனமும், 1000 ஆண்டுகளுக்கு முன் கம்பர்காலத்து நம் புகழேந்திப் புலவர் காலமும் இங்ஙனம் ஆதாரங்கள் மூலம் 1000 ஆண்டுகளுக்கு முன்வரை கால அளவு தெரிந்தாலும் இளந்திரையன் என்னும் மன்னனைப்பற்றிப் பழமையான நூல்களில் தெரிவதற்கிடமாயிருத்தலால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டிருக்குமென்றே யூகிக்க

வேண்டியதிருக்கிறது. துளுவ பாஷையைக் கையாளாததின் காரணம் குடியேற்றப்பட்டதுகொண்டு சிறு சிறு கூட்டங்களாக வாழ்ந்து வந்திருப்பதால் பாஷையை அபிவிர்த்திபண்ணிக்கொள்ள ஏதுவில்லாதிருக்கக்கூடும். அன்றியும் தமிழ்நாட்டிலிருந்து துளுவநாடு சென்று, மீண்டும் தமிழ்நாட்டை வந்தடைந்த தமிழ் மக்களாயிருத்தலுமாகும். தமிழ்நாட்டில் பெருங்கூட்டமாக வாழுமிடங்களிலும் துளுவபாஷை காணப்படாததால் குடியேற்றப்பட்ட காலம் மிக நீண்டதாகவே கொள்ளவேண்டியதிருக்கிறது. அல்லாமலும் வேத உற்பத்தி *6000 ஆண்டுகளிருக்குமென்று லோகமான்ய பாலகங்காதர திலகர் கூறினும், அதற்கு முன்பே இடைச்சங்கம், முதற்சங்கங்களிருந்த கபாடபுரம், தென்மதுரை முதலிய நிலப்பரப்பு குமரியிலிருந்து தெற்கே சில ஆயிர மைல் தூரமிருந்திருப்பதால் அப்பூமிமுதல் இமயம்வரை தமிழ்மொழி, தமிழ்க்கொள்கையுடைய தமிழ் மக்களே வாழ்ந்துவந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். அன்றியும் தெலுங்கு, துளுவம், கன்னடம், மலையாளம் முதலிய பாஷைகள் தமிழ்மொழியிலிருந்தே உற்பத்தியென்று ஆராய்ச்சி அறிஞர் கூறுவதாலும் அம்மொழிகளில் எண்ணங்கள், சொற்கள் தமிழ்ப்பதக் கலப்புடையதாகவேயிருக்க, நாமும் பார்க்கலாமாதலாலும் அம்மொழிகளுக்கெல்லாம் தமிழ்மொழியே தாய்மொழியாயிருப்பதுகொண்டும்,

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினும் ஓர்
எல்லையறு பரம்பொருள்முன் னிருந்தபடி யிருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே யொன்றுபல வாயிடினும்
ஆரியம் போலுலக வழக்கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே.

என்பதற்கிணங்க தமிழ்மொழியையே கையாண்டுவந்திருக்கின்றனர்.

---

* திலகர் வேத உற்பத்தி 6000 ஆண்டு எனக் கூறுவது பாரதத்தைக் கொண்டும், வியாசரால் வேத ஆரம்பம் என்பது கொண்டும், கலியுகத்துக்கு முற்பட்டதென்பதுகொண்டும் கூறுவதாகும். ஆனல் பல்லாவரம் மறைமலையடிகள் பாரதப்போர் 3300 ஆண்டுகளுக்குமுன் 3400 ஆண்டுகளுக்குள் என்றும், யுகமில்லையென்றும், தொல்காப்பியம் 5500 ஆண்டுகளுக்கு முற்பட்டதென்றும் கூறுகிறார்கள்.

## குடியேற்றமும் பழக்க வழக்கங்களும்.

தொண்டைநாட்டிலே முதலில் குடியேறியிருப்பதாற் சென்னை காஞ்சி முதலிய பாகங்களில் பெருங்கூட்டமாக வாழ்கின்றார்கள். சென்னையில் தொண்டமண்டலம் துளுவவேளாள ஹைஸ்கூல் என்ற உயர்தரப்பாடசாலை ஒன்றிருக்கிறது. சென்னைச்சிவனடியார் திருக்கூட்டம் என்ற சபையும் சைவம், சித்தாந்தம் என்ற பத்திரிகைகளையும் நடத்திவருகின்றனர். முதலியார், பிள்ளை என்ற பட்டங்களுண்டு. ஆரியப்பார்ப்பனர்கள் மதம் அதாவது சங்கராச்சாரி மதத்துக்கும் தமிழ்மதமான சைவசமயத்துக்கும் சம்மந்தமில்லை. வேதத்துக்குப் பின்னால் ஆகமம் எழுந்ததின் பின்னர்தான் மத அநுஷ்டான முறைகள் வகுக்கப்பட்டது. மருதநிலத்தைப் பண்படுத்தி உழுது பயிரிட்டு உணவுப்பொருள்களை உற்பத்திசெய்து எல்லா உயிர்களையும் உயிர்ப்பிக்கும் வேளாளமக்கள் தான் ஓய்வு நேரங்களில் அறிவுப் பெருக்கால் முதன் முதலில் தெய்வம் ஒன்றுண்டென்று தீர்மானித்து அதனை உலகிற்குப் பரப்பினர் எனவும், அதற்கு இருளை நீக்கி ஒளியைத்தரக்கூடியதும் மாசுபற்றாத் தன்மையுடையதும் கண்ணுக்கினிமையைத்தரும் நீர்பூத்த சிவந்த வடிவத்தையுடையதுமான ஒரு வடிவத்தைக்கொண்டு கேட்குமிடத்தும் சொல்லுமிடத்தும் நினைக்குமிடத்தும் மாறா இன்பப்பெருக்கினைத்தரும் சிவம் எனப்பெயரும் இட்டனர் என ஒரு ஆராய்ச்சி அறிஞர் கூறுகின்றார். அதற்கிணங்கத் தெய்வம் ஒன்றுண்டென்று கண்டு அதனை வணக்க முறையில் கையாண்டுவந்த வேளாள மக்கள் சமயநடைமுறைக்குத் தலைமையாகத் தங்களிலேயே ஒருவரைக் குருக்களாக நியமித்து அதன்வழி நின்று பரம்பரையாக வழக்கத்தில் கொண்டுவந்திருக்கிறார்களல்லாது நான் பிரம்மம் எனும் மாயாவாதக் கொள்கையாளர்களும், இமயமலைக்கு நெடுந்தூரத்திலுள்ள வடமுனை நாட்டிலிருந்து இந்நாட்டிற்குக் குடியேறிய 'ஆரியமக்களும், சுமார்த்தர்களுமான ஆரியமக்களைக் குருவாய்க்கொள்ளவில்லை. ஆனால் சிறு சிறு கூட்டங்களாக வாழுமிடங்களில் குருக்கள் நியமனத்துக்கு ஏதுவில்லாமை கொண்டு,

தடுத்த தண்ணியன் பாற்கொள்க சாத்திரங்
கொடுக்குந் தேசிகன் றங்குலத் தில்லையே
லடுத்த வன்னிய னேயரு கன்றொழிற்
கொடுக்கொணு பரமார்த்தங் கொடுப்பதே.

என்பதற்கிணங்க மணக்காலங்களிலும் கர்மக்கிரியை காலங்களிலு மட்டும் ஆரியப்பார்ப்பன மக்களை வைத்து நடத்திக்கொண்டு வருகின்றனர். சிவதீக்கைக்குப் பல விடங்களில் பல குருக்களிருக்கிருர்கள். திருவண்ணுமலையிலும் குருக்களிருக்கிருர். அவரது நாமம் விருப்பாட்சித்தேவர் எனக் கேள்விப்படுகின்ருேம். தேவர் என்பது நந்திதேவர் கருவூர்த்தேவர் திருத்தக்கதேவர் என்பது போன்ற பதம் குறித்ததேயாகும். ஒரு மரபினர்க்குச் சூட்டும் பெயர்போலன்று. திருக்கோவிலூர் முதலிய இடங்களில் ஆதீன கர்த்தர்களாயிருப்பதுடன் சிவாச்சாரியார் என்ற பட்டத்துடனும் வாழ்கின்ருர்கள். அவர்கள் குழந்தை பிறந்தவுடன் காதில் (ஐந்தெழுத்து) பஞ்சாக்ஷரத்தைக்கூறும் வீரசைவக்கொள்கையுடையவர்களாகவும் சில விடங்களில் வாழ்கின்ருர்கள். குடம்பையில் மேலமடம் பசவலிங்கதேசிகர் எனத் தேசிகர் என்ற பட்டமும் உண்டு. பழநியிலுள்ள நமது கவிராயர் கூட்டத்தினர்கள் கர்மக்கிரியைகளையும் பார்ப்பனர்களைக்கொண்டு நடத்துவதில்லை. பழநியிலுள்ள நமது பெரிய அண்ணுமலைக்கவிராயருக்கு அண்ணுமலை தேசிகன் என்ற பெயரும் உண்டு. தஞ்சை ஜில்லாவிலும் பல் விடங்களில் வாழ்கின்ருர்கள். வேளாண்மை,வர்த்தகம் சிலவிடங்களில் ஆடைநெய்தற்தொழிலுடனும் பிள்ளை ராயர் என்ற பட்டத்துடனும் வாழ்கின்ருர்கள். திருச்சிப்பாகத்தில் இரண்டோரிடத்தில் சோழியவேளாளர்களெனப்பெயர் வைத்து சிலர் வாழ்கின்ருர்களெனக் கேள்விப்படுகின்ருேம். இவை

சோழமே துளுக்கொங்கு சூழ்ந்த சேரநாட்
டீழமே பாண்டிய மிவற்றி ருந்தவர்
வாழு நாட்டின் பெயர் மருவிவாழ்ந்தனர்
மேழியர் பெருக்கையார் விளம்பத் தக்கவர்.

என வேளாள புராணத்தில் கூறியபடி துளுவவேளாளர் தொண்ட மண்டலம் வேளாளர், கொங்கு வேளாளர், சோழிய வேளாளர், பாண்டியவேளாளர், வேம்பத்தூர் வேளாளர் இங்ஙனமாக அவ ரவர்கள் வாழும் நாட்டைக்குறிப்பதாகும்.

## பட்டம்.

பாலக்காடு முதலிய இடங்களில் வாழ்கின்றூர்கள். சேலம் கோய முத்தூர் ஜில்லாக்களில் பலபாகங்களில் வாழ்கின்றூர்கள். அங்கு நாயக்கர், செட்டியார், பிள்ளை என்ற பட்டங்களுண்டு. திருநெல் வேலி ஜில்லாவில் பல விடங்களில் சிறு சிறு கூட்டங்களாக வாழ்வ துடன் கோட்டார், கொல்லம் இந்த யிடங்களிலும் வாழ்கின்றூர்கள். அவர்கள் முன்னுல் மலையாள அரசனிடத்துத் தொழிலினுல் நன்கு மதிக்கப்பெற்றிருக்கிறூர்கள். அவர்கள் துவாரகாபுரி துளுவநாட்டி லிருந்து வந்ததின் அடையாளமாக கோட்டார் பக்கம் இடலாக் குடியில் துவாரகாபதி விநாயகரை வைத்து வணங்கி வருகின்றூர்கள். இதன் மகிமையை அறிந்த பிறவகுப்பினர்கள் அதனை யெடுத்துச் சென்று தாங்கள் கட்டிய கோயிலில் வைத்தும் அவ்விநாயகர் நம் மரபினர்வாழும் திக்கையே நோக்கியிருந்ததாகவும் அதனைக்கண்டு பிறர் அஞ்சி அவ்விநாயகரை நம்மரபினரிடமே சேர்ப்பித்ததாகவும் கர்ண பரம்பரை, இன்றைக்கும் அவ்விநாயகர் கோவில் நம்மரபினர் கள் ஆளுகைக்குள்ளிருந்துவருகின்றது. அதற்கு ஒரு லட்சரூபாய் பெருமதிப்புள்ள சொத்துக்களிருப்பதாகவும் கேள்விப்படுகின்றேம். ஆங்கு ஓர்போது சென்று தெரிந்துவந்ததின் பின்னரோ அல்லது முற்பட்டோ 42 ஊர் உறவின்முறையில் திருமுகம் எழுதுங்காலத் தில் கொல்லந்தோன்றிய கோட்டாற்று மரகதவிநாயகர் திருவருளி ஞலே என்று எழுதும் வழக்கத்தில் வைத்துக்கொண்டு வருகின்றூர் கள்.

தென்னுட்டில் சில விடங்களில் ஆசாரி என்ற பட்டமிருப்ப தாய்த் தெரிகிறது. அதன் விபரங் கேட்டால் மலையாளத்தில் சில நூற்றூண்டுகளுக்கு முன் பொருட்காட்சிச் சமயம் நம்மில் ஒருவர் சித்திரத்தில் தேர்ச்சிபெற்றவராய் எழுதப்பட்ட உருவத்தினருமை

யைக்கண்டு ஆசாரி என்ற பட்டம் கொடுத்ததாகச் சிலரும், ஆச்சாரி என்றிருந்தவை ஆசாரி என வந்ததாகச் சிலரும் கூறுகின்றார்கள். ஆச்சாரி என்பது பிறருக்கு உபதேசிக்கும் தன்மைகொண்டு வந்த பட்டமாகும். தமிழில் குருக்கள் எனக்கூறுவதாகும். ஆனால் தொண்ட நாட்டில் சிவாச்சாரியார் என்பதுபோன்ற பட்டம் வகித்துப் பின்னால் ஆசாரி என்ற நிலைக்கு வந்திருக்கலாமென்று ஊகிக்க இடமுமுண்டு. ஏனெனில், சொற்பசொற்ப ஜனங்களாய் வாழுமிடங்களில் பழக்க வழக்கங்கள் மாறுதலடைவது இயற்கையே. அதனால் இப்போது வேளாண்மை, கைத்தொழில், வர்த்தகம் செய்பவர்களாயிருக்கிறார்கள். வாசுதேவநல்லூரில் நம் அவநாசிப்புலவர் குழுவினர் மிகுந்த வைதீகமுடையவர்களாயிருக்கின்றார்கள். வேளாளர்களுக்கு ஆசாரி என்பது பொருத்தமில்லையென்பதையும், ஏதோ பழக்கத்தால் வழக்கத்தில் கொண்டுவந்திருப்பதையும் தெரிந்து பிள்ளை என்று மாற்றிக்கொண்டுவருகிறார்கள். அது முறையுமாகும்.

நாசிம்மதேவ மகாராஜா என்னும் மலையாள அரசனால் 700 ஆண்டுகளுக்குமுன் மேற்கண்ட துவாரகாபதி விநாயகர் ஆலயத்துக்கு மானிபம்விட்டுச் சிலாசாசனமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இராஜபாளையத்தில் முன்னோரால் கட்டப்பெற்று இப்போது பழுதுபட்டிருக்கிற *கட்டுவிநாயகன் கோவில்ப் பட்டயசாசனத்தில் காராளர் சித்திரர் எனக் கூறப்பட்டுள்ளன.

கங்கையின் புதல்வர் காராள ராங்குடி
பொங்கத் திண்டிறல் வலிபொருந்து வேனென.

(வேளாள புராணம்.)

வேளாளருக்குக் காராளர் எனப் பெயருமுண்டு. காராளர் மேகத்தை (வெள்ளத்தை) ஆளுகின்றவர் என்பதே. கார்காத்தார் என ஒரு வகுப்புமுண்டு. வேளாளர்களிலிருந்தே பல தொழிலும் வகுப்பும் உண்டாகியிருக்கின்றன. வேளாளர்களிலேயே நடைமுறைகளைக்கொண்டும் உணவுப்பேதங்களைக்கொண்டும் சிறிது பாகு

---

*42ஊர் உறவின்முறைக்குக் கட்டியம் என்ற ஒரு பதவி வகித்த ஒருவரால் கட்டப்பெற்ற கட்டுவிநாயகன் கோவில் எனத் தெரிகிறது.

பாடுகளும், பிரிவுகளும் ஏற்பட்டிருக்கின்றன. வேளாளர் என்பது வேளாண்மை செய்கிறவர்களென்பதேயாகும். முன்னொரு காலத்தில் காமாட்சியம்மையார் இறைவனிடத்துத் திருநாளி நெல்லைப் பெற்று முப்பத்திரண்டு அறங்களையாற்றுவதற்கு இந்த நெல்லை விர்த்திபண்ணத் தக்கவன் வேளாளனே எனவறிந்து வேளாளனை "பிள்ளை வா" என அழைத்தனர். அதுகொண்டு பிள்ளை என்ற பட்டம் வந்ததாகும். அதனை,

வெள்ளைமாமதி மிலைந்தவன் பெற்றமு முலகக்
கொள்ளையின்றவன் நெல்லையு முலகுளோர் குக்கிச்
சள்ளையேறிட வூட்டுமினுந் தொழிற்சார்பாற்
பிள்ளைகாளெனக் கொள்ளலாற் பெற்றபேர் பிள்ளை.

என வேளாள புராணத்திலும்,

புனிதைசீர் காமபீடத் தெம்மன்னை புதல்வராய் நென்முதல்ப் பெற்றுத்
தனியற மதலையாதலான் வேளாண் டலைவர்தாம் பிள்ளையே.

என வேளாண் மரபியலிலும் காண்கின்றோம். வேளாண் பிள்ளை வேளாண் செட்டி என்பதுபோல செட்டி என்ற பட்டமுமிருக்கிறது. வேளாளர் பூ வைசியர் எனவும் கூறுவதுகொண்டு செட்டி என்ற பட்டத்தை வைத்திருக்கிறார்கள். நாயக்கர் என்பதன்னியில் நாயகர் என்ற பட்டமும் உண்டு. அவர்களும் தமிழ் மக்களே வேளாளர்களே. ஆந்திராவிலிருந்து வந்து குடியேறியிருக்கிற தெலுங்கு மக்களுக்கு நாயக்கர் எனப் பட்டமும் இருக்கிறது. ஒவ்வொரு மொழியின் (பாஷையின்) ஒலி, ஒலியின் அளவு, சுவை, பதம், சொற்றொடர் இவைகளின் சிறப்புகளை நன்கு ஆராய்ந்து அவைகளிலெல்லாம் தமிழ்மொழியே சிறப்புடையதென்றும், மெல்லிய ஓசையுடையதென்றும், அப்மொழியாளரிடத்துத்தான் *அன்பெனுங் குணம் இயற்கையிலே உண்டாகும் இயல்புடையதென்றும், பிறமொழியில் புதிதாகக் காணப்படும் எந்தப் பொருளுக்கும் தனித்தமிழில் பெயர்

*தமிழ்நாட்டிலே பிற எந்நாட்டு எம்மொழி எம்மத மக்கள் வந்து குடியேறினும் அவர்களை ஆதரித்துச் சிறப்புடையவர்களாக ஆக்கிவைத்திருக்கிறார்களென்பதை நோக்குக.

கொடுக்கப் பதங்கள் உண்டென்றும் முடிவுகட்டிய மொழிநூல் வல்லாரும் பொன்னு மாணிக்க பூஷணம் எனும் குடும்பத்திலுதித்தவரும் சேலத்திற்கடுத்த பாகல்பட்டி ஜமீன்தாரும் எக்ஸ்க்யூட்டிங் இஞ்சினீயருமான உயர்திருவாளர். P. V. மாணிக்க நாயகர் அவர்கள் துளுவ வேளாளரன்றோ. நாயகர், நாயக்கர், செட்டியார், முதலியார், பிள்ளை, ராயர், சிவாச்சாரியார், ஆசாரி தேசிகர், குருக்கள் என இப்படிப் பட்டங்களுடனிருந்து பொதுவாக துளுவ வேளாளரெனக் கூறப்படினும் சில வகுப்புத் தனித்தனிக் கூட்டங்களாகவும், சில வகுப்புகள் பட்ட வேறுபாட்டுடன் ஒன்றுகூடிய கூட்டங்களாகவும் வாழ்கிறார்கள். பெயர்களுக்குப் பின்னால் சேர்க்கப்படும் பிள்ளை, செட்டியார், முதலியார் என்பதுபோன்ற பட்டங்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இப்போதுள்ள பழக்கம்போலிருந்ததாகக் காணவில்லை.

தமிழ் மாகாணத்தில் ஜனசங்கியைக் கணக்குமூலம் ஏறக்குறைய மூன்று லட்சம் ஜனத்தொகைகொண்டதாக வறிகிறோம். சில அறிஞர்கள் ஐந்து லட்சம் ஜனத்தொகை கொண்டுள்ளதெனக் கூறுகின்றனர். ஆனால் சில பாகங்களில் பொதுவாக வேளாளர்களென்று ஜனசங்கியைக் கணக்கில் பதியப்பட்டிருப்பதால் அவ்வறிஞர்கள் கூறியபடி ஒப்பத்தகுந்ததாகும். அதில் கொங்குநாடு, வேலூர், சென்னை, காஞ்சி, தொண்டநாடு இவைகளில் சில சில யிடங்களில் வைணவ சமயத்தவர்களாகவுமிருக்கின்றார்கள். பாண்டிய நாட்டில் 42-ஊர் உறவின்முறையைத் தவிர சில இடங்களில் சிறிது முற்பட்ட காலத்தில் வைணவக் கொள்கையைத் தழுவியவர்களா யிருப்பதும் தவிர சமீப காலத்திலும் இதுபோதும் வைணவசமயத்தைத்தழுவியவர்களாகவுமிருக்கிறார்கள். இதில் சிலர் தங்கள் பெயருக்குப் பின்னால் ஆழ்வார், இராமாநுஜர், தாசர் என்ற பட்டத்தைச் சூட்டிக்கொள்ள விரும்புவதைப்போலவேதான் நமது மக்கள் ஆங்காங்கு வாழும் நாட்டைப்பொருத்தும், பழக்க வழக்கங்களை அநுசரித்தும் ஒரு குல மக்களாயிருந்தும் பிள்ளை, முதலியார், செட்டியார், ஆசாரி, ராயர், நாயகர், நாயக்கர் என்னும் இத்தகைய பட்டப்பெயர்களை வைத்து வழக்கத்தில் கொண்டுவந்திருப்பதாக அறியவேண்டியதிருக்கிறது. இப்பட்டங்களும் உயர்ந்த பொருள்களையுடையதேயாகும். இருப்

பினும், ஒரு வகுப்பு மக்களுள் பலவித பட்டமிருப்பது பேதத்திற் கிடந்தருமாதலால் பிள்ளை, முதலியார் என்ற பட்டமட்டுமிருப்பின் நலமாயிருக்குமென்பது எமது விருப்பம்.

## மதம்.

கலியுகாதி 4853. ஆங்கீரஸவருஷ தைமீ 10உ பிறந்த பழநிப் பட்டயத்தில் துளுவ வேளாளர், துளுவ காராளர், துளுவ ராயர், துளுவ நாயக்கர் இவர்களுக்குச் சொந்த மடம் எனக் கூறப்பட்டிருக்கிறது. இதில் பட்ட வேறுபாடுகள் காணப்படினும், ஒரு மரபு மக்கள் எனக் காட்டுவதாலும், நம்முன்னோர்கள் சிவாகம விதியையே கையாண்டு வந்திருப்பதாலும், பழநியிலுள்ள நம் கவிராயர் மரபு ஓதுவார்த் தொழில்புரிந்து சிவத்தொண் டியற்றிவந்திருப்பதும், திருவண்ணாமலை, தொண்டைமண்டலம், தமிழ்நாடு பல பாகங்களிலும் அங்ஙனமே சிறப்புடைய மக்களாக வாழ்வதாலும் சைவசித்தாந்தத்துக்கு முதநூலாகிய சிவஞானபோதம் தந்த சிவஞான முனிவர், அப்பர், தாயுமானவர் முதலிய பல சிவாநுபூதிச் செல்வர்களும், நாயன்மார்களில் பலரும், சங்கப்பலகையில் வீற்றிருந்த சிலரும், வள்ளல்களும் வேளாளர்களாகவும், பரம்பரை இயற்கைப் பழந் தமிழ்ச் சைவசமயத்தவர்களாகவும் இறைவனருட்பேற்றைப்பெற்று குன்றாப் பேரின்ப வாழ்வில் கலந்திருப்பதாலும், இன்றைக்கும் புதிதாகக்காணப்படும் சில பாகங்கள் தவிர மற்றும் பெரும்பாகம் தமிழ் சைவசமயத்தவர்களாயிருப்பதாலும் பொதுவாக வேளாளர் என்றால் சைவசமயத்தையுடையவர்கள் என்பதே நூல் ஆதாரமாதலாலும், சிறப்பாக தமிழ் மக்களுக்குத் தமிழ் மதமாகும் சைவசமயமே உரியதாதலாலும், வேளாளர்கள் கங்காபுத்திரர் என்பதை,

அங்கிவற் குருவங்காட்டு மன்னையு நதியுட்புக்காள்
கங்கியன் மண்சுவைத்துக் கருவிழி மீன்களாழ
வங்ககட் டழுங்கலெய்த வமுதவாய் வெளுப்பக்கங்கை
மங்கையுங் கருப்பங்கொண்ட மாதரைப் போன்றாளன்றே.

எழு மூவைந்திரட்டி யிருபத்தேழ்பதி னென்றென்பான்
வாழு மீராறிலேற்ற வலிபெறக் குணங்கள்வேளை

சூழு மேழோரையாதி சுபம்பெறு மிலக்கினத்திற்
கேழு நீர்க்கங்கா நிரங்கீண்டிட வுதித்ததன்றே.

அக்கர வம்புனை யமலற் கன்பினே
னக்கர வலத்தின னரிய வைந்தெனு
மக்கர வஞ்செப வாய ஞரிய
னக்கர வொழிப்பவ னுங்குத் தோன்றினன்.

எம்மர புதிக்கினு மிவனி லாவிடிற்
றம்மர பில்லெனச் சமய யாவரு
மம்மரங் கொழித்திட வரத்தின் மேன்மையா
லிம்மர பாளனங் கெழுந்த காலையில்.

கங்கையங் கன்னியங் கெழுந்து காதலைச்
செங்கையி லெடுத்தனள் சென்னி மோந்தன
டங்கயற் கண்ணருட் டைய னேக்கின
ளங்கனி வாய்திறந் தரைய லுற்றனள்.

என, வேளாள புராணங் கூறுவதாலும், செப்புப் பட்டயத்திலும் ருத்திர சாமுண்டியம்மையால் உற்பவித்தவன் எனக் கூறுவதாலும், பழநி நம் அண்ணமலைக் கவிராயர் பாடிய பலசந்தக் கந்தனந்தாதி சாற்றுக்கவியில்,

கந்தநற் பணிவிடைசெய் பண்டாரச் சன்னதிகள்
கண்டுமெச் சத்தக்கதாய்
கங்கைகுல துங்கன் *படிக்காசுத் தம்பிரான்
கருதுதவ புத்ரனென வாழ்
விந்தைசெறி பெரியவன் கவிராயன் மகவென விளங்கும்
............................

எனக் கூறியிருப்பதாலும், கங்கை சிவசம்மந்தமுடையதாதலாலும், இத்தகைய பட்டயசாசனத்தைக்கொண்டும், நூல்களின் ஆதாரத்தைக்கொண்டும் நமது மரபு தமிழ்ச் சைவசமயத்தவர்களாகிய துளுவ வேளாளர்களேயாம்.

---

*படிக்காசுத்தம்பிரான், பலசந்தக் கந்தனந்தாதி பாடிய அண்ணமலைக் கவிராயரது ஐந்தாவது மூதாதையும் பழநித் தலபுராணம் பாடிய வாலசுப்பிரமணியக் கவிராயரது மூதாதையுமாவர்.

## தொழிலும், சிறப்பும்.

வேளாள புராணத்தில்,

மழையின்றி மன்னுயிரில்லை யம்மழை
யழிவறு தவமின்றியில்லை யத்தவம்
விழுமிய வேந்தின்றியில்லை வேந்தனும்
உழுநர்களில் வழியில்லை உண்மையே.

எண்டி சாமுகத் தெழிலி போலிவ
னுண்டெ னுவிடி னுண்டி யில்லையால்
பண்டி கொண்டெழும் பசி தணித்திடு
முண்டி யில்லையே னுலக மில்லையால்.

எனக் கூறியதற்கிணங்க, உலகம் விளங்க, உயிர்கள் வாழ உணவு கொடுக்க விளைவுப்பொருளை உண்டுபண்ணும் வேளாண்மை செய்தல், மற்றும் மக்களுக்குவேண்டிய பண்டங்களை உற்பத்தி செய்யும் கைத் தொழிலியற்றுதல், மக்களுக்கு வேண்டும் பொருள்களை வாங்கி விற்கும் வாணிபம் செய்தல், மக்களுக்குப் பாதுகாப்பளித்தல் (அரசர் ஜமீன்தார்களாயிருத்தல்) முதலியனவாம். எவ்வுயிர்க்குஞ் செந் தண்மை பூண்டொழுகும் அந்தணர் நெறியாம் கருணை, ஒழுக்கம், ஈகை, மன அடக்கம், இறை வழிபாடு இயற்றி, இறைவனருளைப் பெறுவது ஒவ்வொரு மக்களுக்கும் உரிய பொதுக்கடமையாதலாலும், அந்தணர் எனத் தம்மைச் சொல்லிக்கொள்வார்பால் பல மாறு குணங்கள் காணப்படுவதாலும், மற்றவர்கள்பால் உயர்ந்த நற்குணங்கள் பெரும்பாலும் காணப்படுவதாலும் அது ஒரு தொழிலெனவும் ஒரு வகுப்பாருக்குறியதெனவும் கூறுவதற்கில்லை.

கலி. 4515-வது வருட பழநிப் பட்டயத்தில் முறைப்பெருமை சொல்லிவருவதில், மேழிகொண்டு உழுது வேளாண்மை செய்தும் முன் கையில் சந்தனமரைத்தும் *முளைவாரி யமுதளித்தும், ஆடை கீரிச் சிவந்துகாட்டியும், சூலிமுதுகிலும் சுடு சோறளித்தும், நீலி பழி தீர்த்தும் எனக் கூறப்பட்டிருப்பதுடன் திருவிளையாடற் புராணம் சிறப்புப்பாயிரத்தில்,

---

*முளைவாரி யமுதளித்தல்; இளையான்குடிமாற நாயனரைக் குறிப்பிடுகிறது.

முத்தமிழ்க்குக் கான் முளைசிர மீந்தும்
செட்டி பழிக்காச் செந்தீப் புகுந்தும்
கட்டிய வாடை களைந்திர வலர்க்கு
முட்டிடா தளித்து மூழ்கிநீர் புனைந்துந்
துட்டமாங் கலியின் றூறைக ளைந்தும்
இல்லையென் பவர்க்கு இல்லையென மறுக்குஞ்
சொல்லை யுறைக்கத் துணிவு பெருமை
கொல்லா வாய் கை கொடுத்துயர்த் துணியும்
வல்லா யப்புகழ் வாய்மைபெற் றுயர்ந்துஞ்
சூலிமுதுகிற் சுடச்சுட வன்னம்
பாலமிர் துடனே படைக்கவி சைந்துங்
கோ கொடுத்துக் கொண்ட பீதாம்பர
ஆடையைக் கீரி அரசெதிர் காட்டியும்
முந்திய முளையமு தாக்கி யளித்தும்.
........................

எனவும் கூறப்பட்டிருக்கிறது.

மேழிக்கொடி, குவளைமாலை, பஞ்சகல்யாணிக்குதிரை, வெள்ளை யானை, விஜயமுரசு, ருத்திரசாமுண்டி யாக்கினுசக்கரம் நமது துளுவ வேளாள மக்களுக்குரிய விருதுகள்.

வேளாளர்கள் வேளாண்மைகாலந் தவிர ஒய்வு காலங்களில் நூதனத் தொழிலைக் கண்டுபிடித்து நடத்திவந்திருப்பதால் அரசனுல் அழைக்கப்படவும், சன்மானம் அளிக்கவும் இடமுண்டு. புலை, கொலை நீக்கி எம்மக்களுக்கும் நலம் புரியும் உயர்குணம் படைத்து முழுமுதற் கடவுளை வழிபட்டு அவனருள்பெருவான் வேட்கையுடையார் பெருமையுடையவராகவும் புலை, கொலையோடு தீய குணங்களுடன் இறைவனருளுக்கிலக்காயில்லா வாழ்க்கையுடையார். பெருமையல்லாதவராகவுமிருப்பது இயற்கையேயாகும். உலகில் மக்கள் வகுப்பினர் நாகரீக நிலையில் வாழ, உலகினை வளப்படுத்திய தமிழ் மக்கள் பல தொழில் புரிபவராயிருந்தாலும் புலை, கொலை, தவிர்த்து மக்களிடத்தும், உயிர்களிடத்தும் அன்புடைமைகொண்டு வாழ்வார். எவரும்

உயர்மக்களேயாவார்களாதலால் கீழ் மேல் எனும் பாகுபாடுகொண்டு மனமாற்றமும் பூசல்களும் உண்டாகாவண்ணம்,

· ஒன்றே குலமும் ஒருவனே தெய்வமும்

என்னும் திருமூலர் திருவாக்குக்கிலக்காய் எல்லா மக்களிடத்தும் அன்புடன் வாழ்தல் அறிஞர் செயலாகும். சேலம், கோயமுத்தூர், தொண்டைமண்டல முதலிய இடங்களில் ஜமீன்தார்களாகவும், மிட்டாதார்களாகவும், வழக்கறிஞர்களாகவும், உத்தியோகமுடையவர்களாகவும், திவான்பகதூர் முதலிய பிரபலம் வாய்ந்தவர்களாகவும், செல்வ மக்களாகவும் வாழ்கின்றூர்கள். நிற்க, குடியேற்றப்பட்டவர்களாயிருப்பதுகொண்டு பல இடங்களில் சிறு சிறு கூட்டத்தினர்களாகவும் வசிக்கின்றூர்கள். ஆங்காங்கு சென்ற இடங்களில் தங்கள் தங்கள் மதிநுட்பத்துக்குத்தக்கபடி கவுரவமடைவார்கள்.

சொற்ப ஜனமாய் வசிக்குமிடங்களில் ஊக்கமாய் எக்காரியத்தையும் செய்யமுடியாமலும் பிரபலமாய் வாழமுடியாமலுமிருக்கலாம். ஒரு ஊரில் ஒரு மரபினர் பெருங்கூட்டமாக வாழ்ந்தால் அவர்கள் செல்வாக்குமிகுந்து நிற்கும் அங்ஙனமே தமிழ்நாட்டில் குடியேறிய பிறமொழி மக்கள் வகுப்பினர் தாங்கள் தாங்கள் பெருங்கூட்டமாய் வாழ்வதாலும், ஒற்றுமையாயிருப்பதாலும் ஒரு வகுப்பார் வேறொரு வகுப்பு மக்களாகவும் ஆகிவிடுகிறூர்கள். இது இயற்கையே. இப்படியே பழக்க வழக்கங்கள், கொள்கைகள், வகுப்புகள் அவரவர்கள் செயலுக்குத்தக்கபடி மாறுபாடடைந்துசெல்லும். இதனுல் வகுப்பைப்பற்றிய ஆராய்ச்சித்துறையில் இலக்கணப் பதப்பிரிவு அகராதி உதாரணங்களை விரிவுபடுத்திக்கொண்டு போகவேண்டுவதில்லையென்பது எமது நோக்கமாகும்.

வேளாளர்கள் கங்காபுத்திரரென்றும் கருணீக குலத்தினரென்றும் கூறுவ,

உழுவார் உலகத்தார்க்கு ஆணி. என்பது

பொய்யாமொழியார் திருமொழியாகும். நீரைத் தேக்கிப் பாய்ச்சி உழுது பயிரிட்டு விளைவுப்பொருளை எல்லா உயிர்களுக்கும் கொடுத்து உண்பிக்கும் கருணை அதாவது திருவிளையாடற் புராணத்தில்

அருந்தின ரருந்திச்செல்ல வருந்தகின் ருருமாங்கே
யிருந்தினி தருந்தாநிற்க வின்னமு தட்டுப்பின்னும்
விருந்தினர் வரவுநோக்கி வித்தெலாம் வயலில்வீசி
வருந்திவிண் ணேக்குமோ ரேருழவர்போல் வாடிநிற்பார்.

என்பதற்கிணங்க, கையிலிருந்த வித்தையும் நிலத்திலே போட்டுவிட்டு வானத்தைப்பார்க்கும் ஓரேருழவர்போல் வரும்விருந் தோம்பிநிற்கும் அன்புடையார் என்பதைக் குறிப்பதாகும். உண்டு உயிர்வாழ்வதின் பின்னரே ஆடையாதி அணிகலப்பொருள்கள் உற்பத்தியானதாகும். வேளாண்மையோடு ஒய்வு நேரங்களில் இதர தொழில்களும் புரிந்து வந்திருக்கின்றனர், வருகின்றனர்.

ஜாதியைப்பற்றிய பேதவரலாறுகள் 1500, 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட நூல்களில் அதிகமாக இல்லாமலும், பின்னல் சுருக்கமாகவும் அதன்பின் வரவர மிக விரிவாகவும் இருப்பதாகவே அறியவேண்டியதிருக்கிறது. இதற்கு கலி. 4515ம் வருடப்பட்டயத்தில் காணும் விபரங்களும், கலி. 4853ம் வருடப் பட்டயத்தில் காணும் விபரங்களுமே சான்ருகும்.

## நிறைவு.

கங்கா புத்திரர் என்று கூறுவதை ஒப்பவே, சிவசத்தியாகிய சாமுண்டீஸ்பரி தோள் வியர்வைத்துளியின் உற்பத்தி என்று பட்டயத்திலும் கூறப்பட்டிருக்கிறது. இறைவன் அக்கினிப்பொறியைத் தந்து குமரப்பெருமானை தோன்றச்செய்ததை ஒப்ப, அம்பிகை வியர்வைத்துளியில் உற்பத்தியாவதும் இயற்கையே. சாமுண்டீஸ்வரியின் வியர்வைத்துளியின் உற்பத்தியை ஆராயப்புகின் தாயினிடத்துப் பிள்ளை தோன்றுவது இயற்கையேயாம். இதனை விரிவாக ஆராயப்புகவேண்டுவதின்று 4853-ம் வருடப் பட்டயத்தில் கூறியபடியும் நூல்களின்படியும் சிவபெருமான் தெய்வமரபில் முதல் வருணத்தவராவர். தமிழ் நூல்களின்படி சிவபெருமானுக்கு முழுமுதல்வன் எனப் பெயருண்டு. அம்முதல்வன் அருட்பார்வையால் அம்பிகையினிடத்துத் தோன்றியதுகொண்டு முதன்மையாளர் எனப் பொருள்படும். முதலியார் எனப் பட்டமும் வைத்திருக்கின்றனர். 4853-ம்

வருடப் பட்டயப்படியும் ஆரிய வழக்குப்படியும் மூன்ருவது வருணத்தவராகிய பிரம்மாவின் நெற்றி, தோள், தொடை, கால் இந்த அவயவங்களின் உற்பத்தியைப்பற்றியும், இப்படியே மற்றுமுள்ள உற்பத்தியைப்பற்றியும் ஆராய்ந்து குழப்பிக்கொண்டுபோக மனமின்றி நாம் துளுவ வேளாளர்களென்பதற்கு நமக்குள்ள ஆதாரங்களை வைத்து தெரிந்தவரை கூறினேன். பிழையுளதேல் பெரியோர்கள் பொருக்க.

## உண்மையறிதல்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்-அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

(திருவள்ளுவர்.)

துளுவ வேளாளர்களிலே கல்வியில் வல்ல அறிஞர்களிற் சிலர் கண்ணபிரான் கூறிய கீதையில் பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திர என்னும் நான்கு ஜாதியில் நான்காவது ஜாதியாகிய சூத்திரவகுப்பைச் சேர்ந்த வேளாளர்கள் நாம் எனக் கூறியதாகக் கேள்விப்படுகின்ரோம். கண்ணன் பக்தியிலீடுபட்டதற்காக கீதையை ஆதாரமாக வைத்து நாலாவது ஜாதியில் பிறந்ததாகக்கூறுவது தங்களுக்கும் தங்கள் சொல் சரியாயிருக்குமென்று நம்புகிற தங்கள் மரபைச் சேர்ந்தவர்களுக்கும் இழிவைத்தரத்தக்கதாக அமைகின்றதை உணரும் உண்மையான ஒரு வேளாளன் மனம் வருந்தாதிருக்க முடியாது. தெய்வத்தினிடத்துப் பக்தி செலுத்தவேண்டுவது நலனை விரும்பும்மக்களாவார் கடமையாதலால் பக்தியைப்பற்றியாவது பிராம்மண போஜனம் தர்ப்பணாதிகள் செய்யாவிடத்து நாஸ்தியையடைவார்கள் என்பது முதலானவாக்கியங்கள் கண்ணபிரானல் கூறப்பட்டதுதான என்பதுபற்றியாவது நாம் ஒன்றும் கூறுவதற்கில்லை. ஆனல் ஒரு மொழி வழங்கியநாட்டில் மற்றொருமொழி வழங்கப்படுமானல் அம்மொழியும் அம்மொழித் தெய்வப்பெயரும் அம்மொழிப் பழக்கவழக்கங்களும் பின்னல் வந்து குடியேறியிருக்கக்கூடுமென்பதை சாதாரணஆராய்ச்சியாளராலும் அறியத்தக்கதன்ரோ. முதன்மையிலுள்ள மொழி மக்கள் நாகரீகம் பெற்றிருந்தார்களா இல்லையாவென்பது பற்றியும் அதில் மக்கள் நிலைபற்றியும் இறைவன்

தன்மைபற்றியும் கூறும்நூல்கள் உள்ளனவா இல்லையா வென்பது பற்றியும் ஆராய்ந்துபார்க்கின் பிறமொழிக் கலப்பில்லாத தனித்தமிழ் நூல்களிருப்பதையும் அதனில் தெய்வப்பெயர் முருகன், மால், சிவம் எனத் தமிழ்மொழியில் வழங்கப்படுவதும் முழுமுதற் கடவுளாம் சிவனை வழிபடுமுறையையும் அதற்குத்தலையாயிருந்து கையாண்டவர்கள் வேளாளமக்களேயென்பதுவும் வேளாளமக்களே *அரசர்களாயிருந்து இமயம் வரை வேளிர் என வேளாள அரசர்கள் ஆண்டு வந்திருக்கிறார்களென்பதுவும் தெரியலாம். அங்ஙனமிருக்க பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திர என்னும் சொல் தமிழ் அல்லவென்றும், அச்சொல் தமிழ் மக்களுக்கு உடன்பாடல்லவென்றும் அறிதல் வேண்டும். அல்லாமலும் சூத்திரன் என்பதற்கு அநாசாரன், வைப்பாட்டி மகன், கண்டதைப் புசிப்போன், அடிமைப்பட்டவன் என்கிற பொருளே கூறப்படுவதல்லாமல் வேறொரு உயர்பொருளும் கிடையாதென்பதை சகல நூல்வல்ல பண்டிதர்களும் முடிவாகக் கூறிவிட்டார்கள். இத்தகைய வார்த்தைகளுக்கு உண்மை யுணர்வுடைய வேளாளன் மனம் இடந்தாராதன்றோ. அல்லாமலும் தமிழ் மக்கள் தங்கள் பண்டைத்தமிழ் முறையினையும், வரலாற்றினையும், தமிழ் நூல்களையும் ஆராய்ந்துணராமையால் தங்களுக்கு இழிவு வந்தடைவதையும் பொருட்படுத்தாது மயங்குகின்றனர். நிற்க, வேதம் என்றால் என்னவென்பதைச்சிந்தியாது அது கடவுள் வாக்கென்றும்,தெய்வீகமுள்ள நூலென்றும், அவ்வேதம் இருக்கு, எசுர், சாம, அதர்வணம் என்னும், நூல்கள்தான் உலகிற்கேமுதன்மையானதும், தலையாயதும் என மயக்கமுறுகின்றனர். தமிழ் மக்கள் வேதத்தைப் பார்த்தால், படித்தால், கேட்டால், கண்ணைக்குத்த, நாக்கை அறுக்க, ஈயத்தைக் காய்ச்சி ஊற்றவேண்டுமென்று ஆரியமக்கள் கூறி அவர்கள் நூலிலும் அமைத்திருப்பதுகொண்டும் அவ்வேதத்தை தமிழ் மக்கள் படிக்காததாலும் ஒருவர் வேதத்தில் இன்னவிதம் கூறியிருக்கிறதென்று கூறியவுடன் அதனைச் சிறிதளவும் ஆராயாமல் அதற்கு அடிமைப்

*1800 ஆண்டுகளுக்கு முன்னரும் செங்குட்டுவன் என்னும் சேர அரசன் கண்ணகி என்னும் கற்புடைத் தெய்வத்துக்கு கோயில் அமைத்து வழிபட வடிவம் சமைப்பதற்கு இமயம் சென்று கல்லெடுத்து ஆரியஅரசர்கள் தலையில் வைத்துக் கொண்டுவந்திருக்கின்றான்.

பட்டுத் தன் அறிவையும் பொருளையும் பறிகொடுத்துத் தம் இழிவை யும் நிலைநிறுத்திக்கொள்கின்றனர். வேதம் என்பது தற்போது மக்கள் கருதியிருக்கிற இருக்கு, எசுர், சாம, அதர்வணமென்னும் நாலு வேதமும் தமிழ் மக்களுக்குரியதல்லவென்றும் அது இறைவன் வாய்மொழியல்லவென்றும் பிற்காலத்தில் வந்து குடியேறிய ஆரியமக்கள் பலரால் தொகுக்கப்பட்டதென்றும், அதில் ஆடு, மாடு களைக் கொன்று சோமப்பூண்டின் சாறு முதலான மதுபானங்களை உண்டு, வெறியாட்டு வேள்வி நடத்தியதையே பெரும்பாலும் கூறிக் கொண்டுபோகிறதென்றும் சிறு தெய்வங்களான இந்திரன், வரு ணன், அக்கினி முதலிய தெய்வங்களுக்கு வழிபாடு குறிக்கப்பட் டிருக்கிறதன்றி தனக்கொரு தாய்தந்தை யில்லாதவனும், தானே யாவற்றிற்கும் தாயும் தந்தையுமானவனும், பிறப்புமிறப்புமில்லாத வனும், பிறப்புமிலி இறப்புமிலி தாயுமிலி தந்தையிலி என்னும் முழு முதல் இறைவனைக்குறிக்கும்சிவத்தைக்கூறப்படவில்லையென்றும், அவ் வேதங்களிலுள்ள ஆபாசங்களைக் காணச்சகிக்காது இயற்கையிலேயே அன்பெனுங்குணங்கொண்ட தமிழ்மக்கள் ஆரியமக்களைத் திருத்தும் பொருட்டு தமிழ் முறைகளைக் கூறிவந்திருப்பதுமல்லாமல் விசுவா மித்திரன் என்னும் தமிழ் மன்னனல் வேதத்தின் சிலபாகம் திருத்தி யமைக்கப்பட்டதென்றும், இற்றைக்கு 3300 ஆண்டுகளுக்குமுன் நிகழ்ந்த பாரதப்போருக்குப் பின்னர் வேதத்தின் சிலபாகம் எழுதப் பட்டதென்றும், இய்றகைப் பழந்தமிழ் முறைக்குரிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் பாகங்களைக்கூறும் தமிழ்மறை நான்கு உண்டென்றும், அவை குமரிக்குத் தென்பாலுள்ள நிலப் பரப்பு, கடலுள் மூழ்கப்பட்டபோது கடலுக்கிறையாகிவிட்டதென் றும், அக்கொள்கையை 5500 ஆண்டுகளுக்கு முற்பட்ட இலக்கண நூலாகும் தொல்காப்பியத்தில் காணலாமென்றும் இலக்கிய முறை யில் பொய்யாமொழியார் கூறிய திருக்குறள் மூலம் அறியலாமென் றும், அதுவே தமிழ்மறை என்றும், வடமொழி, தென்மொழி, ஆங் கில மொழியிலும் வல்லுநரான சுவாமி வேதாசலமென்னும் மறை மலையடிகள் தாம் இயற்றிய நூல்களில் ஆரியவேதத்தில் இன்னின்ன இடத்தில் இன்னின்ன கூறியிருக்கிறதென்பதை அதனதனை அப் படியே விளக்கமாக எடுத்துக்காட்டித் தக்க சான்றுகளோடும்

ஆராய்ச்சிமுறையில் தெளிவாக விளக்கியிருக்கிறார்கள். தமிழ் மக்கள் மறைமலையடிகள் எழுதிய நூல்களை நோக்கின் உண்மை புலப்படும். இங்ஙனமிருக்க, இந்நாட்டில் குடியேறிய ஆரியமக்களுக்கு உணவு, உடை கொடுத்து உதவிய தமிழ் மக்களுக்குக் கைமாறாக ஆரியப் பார்ப்பன மக்கள் கொடுத்த சூத்திரன் என்னும் இழிவுடைய சொற்களைத் தமிழ் மக்கள்மேற்போட்டுக் கொள்வது ஆராய்ந்து நோக்கா நிலையைக் குறிப்பதுமன்றி அவை தமிழ் மக்களுக்கு எம்முறையிலும் எள்ளளவும் பொருத்தமில்லையென்பதும் அறியத்தக்கதே.

நூல்களுக்கு விரிவாகப் பொருள்படுத்திக்கூறும் கல்வியில் வல்லவர்களாயிருந்தாலும், ஆராய்ச்சி நூலினை நோக்கியும், உலகத்தின் பரப்பு எவ்வளவு அதில் வாழ்க்கையிலீடுபட்டுள்ள மக்கள் எண்ணிக்கை எவ்வளவு, எண்ணிக்கையில்க் கட்டுப்படாத மலை நாடுகளிலும் இன்னும் காணாத தீவுகளிலும் மக்கள் கூட்டத்தினரிருக்கின்றனரல்லவா. உலக மக்களின் பிரிவுகள் பாகுபாடுகள் என்னென்ன; மத அநுட்டான முறைகள் எப்படி; அவரவர்கள் பூர்வ நிலையைப்பற்றி என்ன கூறுகின்றார்கள்; அம்மொழிகளில் பிறமொழிகள் எந்த அளவில் கலந்திருக்கிறது. பிரபலம்வாய்ந்த தேசங்கள் இருக்கும் இடமெங்கே; இல்லாமற்போனதற்கு காரணம் என்ன. எந்தெந்த நாடுகள் எவ்வெக்காலங்களில் சிறப்புற்றன. இவ்வளவு மொழி(பாஷை)கள் இவ்வளவு மதங்கள் இவ்வளவுபேதங்களையுடையதாக இருப்பானேன். இது கடவுள் அமைப்பா? மக்கள் வகுத்ததா? இதற்கும் நமது நூல்களுக்கும் எந்தெந்த வகையில் பொருத்தம்? இதற்கு ஆராய்ச்சி நூல்கள் உள்ளனவா என்பது முதலான இந்நிலைகளை ஆராய்ந்து பார்க்குங்கால் உண்மை இதுவெனக்கண்டு சமநோக்குடன் மக்களுக்குப் பரப்ப இயலும். அங்ஙனம் ஆராய்ச்சியினை நோக்காவிடத்து தம்மைத்தாமே தாழ்ந்த நிலையிலுள்ளவர்களென ஒப்புக்கொள்ளும்போது தம்மிலும் தாழ்ந்த பிறருண்டென்று கூறித் தம்மை இழிவுபடுத்துகின்றதையுமறந்து அதை நிலை நிறுத்தத் தம் கல்வித்திறமையைக்காட்ட முன்வரவேண்டியதாகவே அமைகிறது. இம்முறையால் தான் கற்றவர்கள் மிகுந்திருந்தும் நம் நாடு நலமிலாதொழிகின்றன.

ஆகவே, இறைவன் மக்களை உயர்வு தாழ்வுடன் படைக்க வில்லையென்றும், வருணாச்சிரமம் என்பது மக்களைப் பேதப்படுத்தும் நிலை யென்றும் ஒரு குலத்துக்கொரு நீதிகூறும் மனுமுறை பொது விதியல்லவென்றும் மக்கள் முதன் முதலாக வளம்பெற்று வருங்கால் வேளாளமக்கள் சிறப்புடையவர்களா யிருந்தார்களென் றும், இறைவன் எல்லா மக்களிடத்தும் கருணைகொண்டருள்புரியும் போது மக்களுக்கு மக்கள் பேதம்பாராட்டுவது இறைவன் அருளுக் கிலக்கானதாயில்லை யென்றும் அறிந்து எல்லாமக்களிடத்தும் அன்பு பூண்டொழுகுதல் வேண்டும். அல்லாமலும் சமயவழக்குகளிலும்

..........................சமயகோடிகளெலாம்
தந்தெய்வ மெந்தெய்வ மென்று
எங்குந்தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது
வெங்கனும் பெருவழக்காய்
யாதினும்வல்லவொரு சித்தாகி யின்பமா
யென்றைக்கு முள்ளதெதுமேற்
கங்குல் பகலற நின்றவெல்லையுள தெதுவது
கருத்திற் கிசைந்ததுவே.

-எனத்தாயுமானவரும்

யாதொருதெய்வங்கண்டீர் அத்தெய்வமாகியாங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்

என அருணந்தி சிவாச்சாரியாரும் கூறியதற்கிணங்க தெய்வம் ஒன் றென்றிரு என்பதைக் கடைப்பிடித்து நமது துளுவ வேளாள பெரு மக்கள் ஒவ்வொருவரும் மதமாறுதலைப்பற்றியோ பட்டமாறுதலைப் பற்றியோ பேதம் கொள்ளாமல் ஒன்றுபட்ட அன்புடைய மக்க ளாய் வாழவேண்டுமென விரும்புகின்றோம்.

எல்லாரு மின்புற்றிருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே.

(தாயுமானவர்.)

நலம் ! நலம் !! நலம் !!!

உ

சிவமயம்.

# துளுவர்குல வேளாளர் பழநி மடாலயத்துப்

# பட்டயம்.

இஃது வருடாந்திரக் கட்டளைக்காக 42-ஊர் உறவின்முறைக்கு பழநிமடத்துப் பண்டாரம் வழக்கம்போல் கி. பி. 1912-ம் வருடம் அருப்புக்கோட்டைக்குப் பட்டயம் கொண்டுவந்திருந்த காலத்தில் ராம. மா. இராமையா பிள்ளை எழுதிய பட்டயத்தின் நகல்.

42-ஊர் உறவின்முறைக்குப் பண்டாரம் வரும்போது அந்தந்த ஊர்களில் இதர வகுப்பினர்களுக்கும் அறிவித்து அவர்களுள் படக் கூடிய கூட்டத்தில் பட்டயத்துக்குத் தூபதீபங்காட்டி வாசிப்பது வழக்கம்.

பட்டயத்திற்கண்டபடியே நகல் எழுதியுள்ளது.

கடவுள் வாழ்த்து.

வையநீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான்றழைத் தோங்குக
தெய்வ வெண்டிரு நீறு சிறக்கவே.

கருணைபொழி திருமுகங்க ளாறும்வாழி
கரகமலம் பன்னிரண்டு வேலும்வாழி
இருசரண மென்றலைமேல் நாளுமோங்க
இந்திரவிக் கப்பாலும் இனிது வாழி
அருள்பரவி யமரர்சிறை மீட்டியாண்ட
ஆறிரண்டு நயனத்தி னழகும்வாழி
மருவணிபைங் கடம்பத்தார் மார்பும்வாழி
மயிற்பரி சேவற்கொடியும் வாழிவாழி.

அடைந்தவர் துணைவாவாழி யடையலர்க் கரியாவாழி
மடந்தைதன் மைந்தாவாழி மாதவன் மருகாவாழி
திடம்புனை கோவேவாழி தேவர்க டேவேவாழி
படர்ந்த விண்ணவர்கள்போற்றும் பதாம்புய வாழிவாழி.

நன்னெறி முகமும்வாழி நல்லநின் முடியும்வாழி
பன்னிரு காமும்வாழி பாதபங் கயமும்வாழி
கன்னிமா ரெழுவர்வாழி கதிர்செறி பழநிவாழி
என்னிரு வினைகடீர்க்கும் இளையவா வாழிவாழி.

திருநுத லாறும்வாழி திகழ்முடி யாறும்வாழி
மருவணி புயமீராறும் வளர்வடி வேலும்வாழி
அருமறை பரவுந்தெய்வ யானைமின் வள்ளிவாழி
குருபரன் பழநிமேவு குமரவேள் வாழிவாழி.

திரிபுவன தகன பரமேஸ்வரர் குமாரன் அமரர்சிறை மீட்டவன் தேவர்கள் தேவன் தெய்வலோக நாயகன் அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகன் கோகனகனைச் சரசமாடிக் குட்டிக்குடிமியை நெட்டிப்போக்கி பிரமபதங்கொடுத்த குமர கெம்பீரன் கொக்கருவற்ற யாழி கொட்டராவுத்தன் வக்கிரமிடு அசுரசாவட்டமென்றுரைப்பாய் உக்கிர மயிலேறிவரு முத்தண்டதீரன் பறக்கிரபகட்டக்காபட்டிட படுகளத்தில் கொக்கரித் துடல்கிளித்த குக்கிடக் கொடிக்குமாரன் கூளிகள் கைகொட்ட கூகை பசாசுகள் கொக்க நிர்த்தாள மொத்த வடவையனல்போலெழுந்துக் கிரமுற்ற சூரன் மாழ்வதற்கு வடிவேலெடுத்த ஈராறுகையன் மாகமுறவோங்கு கொக்கிருமாற வெட்டி வென்று தேவர் சிறைமீட்ட வெற்றிச் சேனுபதித்தலைவன் சிறகிலெண்மர்கள் பரிய வீசிடும் மரகதக் கலாபமயில் வாகன நாதன் வேள்வியிற்பிறந்த திருபுரிக் கொட்டுதலரில்வரு சதுரன் சந்தனப் பொதியாசலமுனிக்குச் செந்தமிழ்ப் பனுவலு மாறெழுத் துண்மையுமுற்பனமுடனே யுபதேசம் வைத்தவன் வாணிதேவிக்கு வாக்குவரங்கொடுத்தவன் அருணகிரிநாதற்கு வாக்குவரங் கொடுத்தவன் மலைமகள் புதல்வன் தேவர்க்கின்பம் சிறப்பாயளித்தவன் எள்ளுக்குளெண்ணைபோ லெங்கும் நிறைந்தவன் வள்ளிக்கும் தெய்வயானைக்

கும் மணவாளன், சூரியபதவிதோன்ற வளித்தவன், நற்கீரனைச் சிறை நலமாய் விடுத்தவன், பாண்டியன் சுரமும் பருங்கூனும் தவிர்த்தவன், மூங்கையை (ஊமையைப்) பேசவைத்தவன், அசுரர் குலாந்தகன், அமரர்பதி காவலன், பன்னிருபுயாசலன் பவளமேனியன், தோகை மயில் வாகனன், சேவற்பதாகையன், திருப்பரங்கிரி திருச்செந்தூர்த் தலமும் ஆவினங்குடி திருவேரகங்குன்று தோராடல் பழமுதிர்சோலை வென்றியா யிக்கந்த வேலாயுதக்கடவுள் அரிதிருமருகன், சிவசுப்பிர மணியன், சண்டப்ரசண்ட வண்ட தேவதைகள் மிண்டன், உத்தண்ட தேவதை தண்டன், ஆராறு நூறுக்கும் அட்டமங்கலமுடனீராறு பள்ளியிலங்கி வளர்கின்ற வைகாபுரிநாட்டுக் கிறைவன், இடும்பன் மலையன் மலைகாவலன் தேன்பொழிற்சோலை சிவகிரியுரை ஒண்மா திரையெறியு மன்னிய குளக்கரை யமர்ந்து பலவுயிர்க்கிரங்கும் தந்தி முகத்துத் தமையர்க் கிளையன், பத்திப்பிரியன், பக்தவச்சலன், எல்லாத் தேவர்க்கும் வல்லவன். ஸ்ரீவீர பழநிமலை வேலாயுதச்சாமியார் திருவுளப்படிக்கு வீரவாகுத்தேவர் அருளிய பாடல்.

நமது பக்தசனமாகிய சுபத்திரி மனமகா மண்டலேஸ்வரன் ஆரியர் தளவி பாட மூவாராயர் கண்டன் முத்தமிழாயிரவர் கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் பாண்டிமண்டலப் பிரதாபனுசாரியன் சோழமண்டலப் பிரதாபனுசாரியன் சேரமண் டலப் பிரதாபனுசாரியுன் தொண்டை மண்டலப் பிரதாபனுசாரியன் ஈளமும் இயாழ்ப்பாணமுந் திறைகொண்டருளிய ராஜாதிராஜன் ராஜபரமேஸ்வரன் ராஜமார்த்தாண்டராஜகேசரி சிங்காசனுதிபதி சாமி காரிய துரந்தரகானகன் விருது பெற்ற கட்டாரிச் சாளுவன் அசுபதி கெஜபதி நரபதியாக நாலொக்கண்டன் அம்பத்தாறு தேசமுஞ் சூழ்ந்த நாவலம் பெருந்தீவில் நரபதியாகிய பூலோக புரந்தரன் பூர்வ தெக்ஷண பக்ஷம் உத்திரசமுத்திராதிபதி டம்பை எழுபத்திரண்டு பாளையப்பட்டும் திறைகொண்டருளிய உலகமெல்லாம் ஒருகுடைக்கீ ழாண்ட விஜயநகரமென்கின்ற பட்டணத்தில் வீரசிங்காசனத்தில் எழுந்தருளியிருந்த பிரதாப ஈஸ்பரனுகிய பிரபுடதேவராயன், சிங்க ராயன், மல்லிகார்ச்சுனராயன், விருபாட்சிராயன் இவர்கள் பிரதிவ ராட்சிய பரிபாலனம் நடத்திவருகிற காலத்தில் ராயநகர்க்குக் காரி

யர்த்தன மகுடமன்மத சுகுடதுட்ட நெட்டூற கோலாகலன் விகட மிடும் வாகழ மகுடதாராகிய வீரபத்திரன் மும்முறசெறியும் முத்தமிழ் விநோதன் தவநெறியுள்ளவன் சத்திய வாக்கன் சிவநெறி தழைக்கத் திருநீறிட்டவனுச்சிதபோஜன் கச்சியிலதிபனுகிய விஸ்வநாத நாயக்க ரவர்கள், திருமலை நாயக்கரவர்கள் நான்மாடக்கூடலாகிய மதுரையம் பதியில் வீற்றிருந்தருளித் திக்குவிஜயஞ்செய்து செங்கோல் செலுத் திவரும்நாளில் அத்துணைராஜ்யமாகிய கொங்குமண்டலம் இருபத்து நாலு நாடு, அறுபத்து நாலு காதவட்டகைக்குள் நரையனூர் நாடு. ராசராசபுரம், வஞ்சிலாடபுரம், தாராபுரமென்னும் சுப ஸ்தானத்தி லெழுந்தருளியிருந்தும் ஓதியுணர்ந்து உலகமுழுவதும் மகாராஜராய் ஆளுதற்கு நீதிசாரம் நினைவுடனுகந்தும் மனுமுறை தவருதான், வரகுண நாடுரையான் முத்தமிழ்க்கதிபன் அறிவுக் கனந்தன் அழகுக்கு மன்மதன், சொல்லுக் கரிச்சந்திரன், வில்லுக்கு விஜயன், மல்லுக்கு வீமன், அறத்துக்குத் தருமன், மறத்துக்கு வன்னியன், பரிக்கு நகுலன், கரிக்கு உதயன், கொடைக்குக் கர்னன், என்ன இப்படிப்பட்ட புகழ்பூண்டு இன்சொல்லா லினிதளித்து வள்ளுவ ருரைத்த முப்பால் மொழியின்படி அறிவையறிந்து அல்லவைகடிந்து நல்லவைநாடி பலகுடி தழைக்க ஆறிலொரு கடமைகொண்டு அருள் பெருக அன்புகூர்ந்து யாகசாலையும் அந்தணர் வேள்வியும் அருமறை யொலியும் தர்ப்ப சாயுட்சயமு மிப்படித் தருமம் நடந்துவருகிற கலி யுக சகார்த்தம் 4515-க்கு மேல் செல்லாநின்ற விசுவாவசுஷு வைகாசிமீ 15வ சுக்கிரவாரம் துவாதசி நட்சத்திரம் தைதுலவா கரணமும் பெற்ற சுபநாளில் முன் பூர்வீகங் காஞ்சீபுரத்தில் ஏகாம் பர சுவாமி சன்னிதானத்தில் எழுதிய பட்டயத்தின் வரலாறு எழு தினது என்னவென்றால்,

ஆதிகாலத்திலே ருத்திரமூர்த்தியும், ருத்திரசாமுண்டியம்மனும் கைலாயத்தில் தேவர்கள்கூடிய சபையில் எழுந்தருளியிருக்கிற வேளை யில் ருத்திரமூர்த்தியானவர் ருத்திரசாமுண்டியம்மனை நோக்கிப் பார்க்க, அப்போது ருத்திரசாமுண்டியம்மன் சரீர ஆனந்த புளகாங் கிதமாகி வியர்வை எழும்பினதில் வலப்புரத்தோளின் வியர்வைத் துளியே ஒரு ஆண் சொரூபமும். இடப்புரத்தோளின் வியர்வைத்

துளியே ஒரு பெண் சொரூபமுமாகி இந்த இருபேரும் ருத்திர சாமுண்டியம்மன் சீர்பாத கமலத்திலே வாய்பொத்திக் கைகட்டி நமஸ்காரஞ்செய்து நிற்க, அப்படியே நின்றமாத்திரத்தில் இவர்கள் பேரிலே அதிக சந்தோஷமாகி ருத்திரமூர்த்தியுடனே அம்மன் திரு வுளம்பற்றி இந்த நரரூபமான ஸ்திரி புருடாளிருவரைத் தேவரீர் கடாட்சம்புரிந்து இரட்சிக்கவேணுமென்று கேட்க அப்போது உன் னுடைய வியர்வைத் துளியே துள்ளி நரரூபமாய்ப் பிறந்துவந்த படியினுலே இவருக்குக்,

## துளுவர்குல வேளாளரென்று

பெயரும் கொடுத்தோம் பெண்ணேயென்று பின்னுமிவர்களைநோக்கி உன் குலத்துக்குப் பிரதாபம்பொருந்த வடகேதாரபர்வதம், யமுநா நதி, துளுவநாடு, துவாரகாபுரிப்பட்டணம், பஞ்சகல்யாணிக்குதிரை, வெள்ளையானை, குவளைமாலை, விஜயமுரசு, மேழிக்கொடி, ருத்திர சாமுண்டி யாக்கினுசக்கரம், சிங்கக்கொடி, கருடக்கொடி, யாழிக் கொடி, புலிக்கொடி, மகரக்கொடி, பஞ்சவர்ணக்கொடி, பஞ்சவர்ணக் குடை இப்படிப் பல விருதுகளுங் கொடுத்தோம். நீங்களிருவரும் ஸ்திரிபுருடராகிப் புத்திரபௌத்திர சௌபாக்கிய சந்தானத்துடனே கிளைபெருகி இந்த லோகாதிலோகமெல்லாம் துளுவர்குல வேளாளர் என்கிற பிரபலம்படைத்து வாழ்ந்திருக்கக்கடவீரென்று ஆசீர்வாதஞ் செய்தனுப்பிய பிரகாரத்துக்கு வந்த

## துளுவர்குல வேளாளர்

அந்த ருத்திரமூர்த்தி ருத்திர சாமுண்டியம்மன் கிருபையினுலே பூலோகத்திலேவந்து நிலையாகிக் கிளை கோத்திரங்கள் பிரபலித்துத் தரும நீதி தவருமல் வாழ்க்கை புரிந்தும், மேழியைக்கொண்டு வேளாண்மை செய்தும், அரவின் வாயில் அரியமணி வாங்கிக் கவி ஞோர்க்குக் கொடுத்தும், ஆடைகிறிச் சிவந்துகாட்டியும், சூலி முது கிலும் சுடுசோறளித்தும், நீலி பழிதீர்த்தும், முன் கையில் சந்தன மரைத்தும், முளைநெல்வாரி யமுதளித்தும், பேரூர்ப் பெருமானையக ளைக்கூமனுவத்துண்டு கவிஞோர்க்கும் சிவிகைக்கும் பத்தும விக்கி

ரமபாண்டியன் முன்னே சத்து விஷயத்துக்குமாக யானை கொடுத்து இப்படித் தொண்ணூற்றாறு கீர்த்திப் பிரபலமும் படைத்து நவரத்ன தண்டிகை வெள்ளை வெண்சாமரை முதலாகிய விஜயவிருதுகளும் பொருந்தித் தருமநீதி தவறாமல் காஞ்சீபுரம் ஏகாம்பர ஈஸ்வரர் சன்னிதானத்திலே எழுதிய தாம்பிர சாதனப் பட்டயத்தின் பிரகாரத்துக்கு (56) ஐம்பத்தாறு தேசத்துக்குள்ளாகிய சேர சோழ பாண்டியன் மூன்று சிம்மாசனாதிபதிகள் சமூகங்களிலும் அவரவர் நாடு நகரங்களிலும் உள்ள துளுவ வேளாளர் பின்னும் பாண்டியதேயத்திலும் மதுரை முதலாகிய நகரிலுள்ள துளுவவேளாளரோடு சோழ தேயத்திலே தஞ்சைநகர் முதலான திரிசிரபுரம் திருவம்பூர் நகரங்களிலுள்ள துளுவ வேளாளரனைவரும் சேர தேயத்திலே செலங்கலசபாகம் கொச்சி பாலைக்காட்டிலுள்ள துளுவ வேளாளரனைவருங் கூடி வீரபழநிமலை வேலாயுதச்சாமியார் சன்னிதானஞ் சின்னோப நாயக்கர், தானவராசபண்டிதர், பாணிபாக்கிர உடையார், காத்த சாமிபிள்ளை, பழநிக்கவுண்டன் மற்றுமுண்டாகியதான பரிகலத்தார் முன்னிலையாக கங்காளசித்த உடையார் குமாரர் குமாரசித்த பண்டாரத்திற்கு தாம்பிர சாதனப் பட்டயமாக எழுதிக்கொடுத்த விபரம்.

1. பழநிமாநகரில் கைலாசநாதர் சன்னதியும் பெரியநாயகியம்மன் சன்னதியும் முத்துக்குமாரசாமி திருவுலாப்புரமாய் திருவாவினன்குடி சிவகிரிக்கெழுந்தருளிவருகிற வீதியில் கிழக்குவாசல் வடது சிறகில் துரைகளைப்பெரியவன் கவிராயர் கேட்டு வாங்கின மடத்து இடமாவது.

கிழக்கு செட்டிகள் மடம் பாலமுத்து நாயக்கர் மடம் செட்டிகள் மடத்துக்கும் கிழக்கு, கிழமேல் நடக்கும் ராஜவீதிக்கும் வடக்கு, பள்ளி பழநிக்குடும்பன் வகையரா வீட்டிற்கும் தெற்கு. இந்த நான்கெல்லைக்குட்பட்ட யிடத்தில் கிழமேல் முழம் 39, தென்வடல் முழம் 105 தான் கேட்டு வாங்கி உண்டு செய்த தரும மடம்.

2. திருவாவினன்குடி அடிவாரத்தில் பழநிமலைக்குப்போகிற ராஜவீதி தெற்கு வடக்கு வீதியில் மேல்புரம் துரைகளைப்பெரியவன் கவிராயர் கேட்டு வாங்கின தண்ணீர்ப்பந்தல் மடத்து இடமாவது:—

வெள்ளாளர் மடத்துக்கும் வடக்கு, மறவர் மடத்துக்கும் தெற்கு, தென்வடல் ராஜவீதிக்கும் மேற்கு, தென்வடலோடிய நாராசத்துக்கும் கிழக்கு. இந்த நான்கெல்லைக்குட்பட்ட தெற்கு வடக்கு முழம் $21\frac{1}{2}$, கிழமேல் முழம் 61.

இது வாங்கித் தண்ணீர்ப்பந்தல் மடவாலய தருமம் செய்து கொடுத்து அரதேசி, பரதேசி, பசித்துவந்தபேருக்குச் சாப்பாடு கொடுத்து உப்பு, ஊருகாய், திருமஞ்சன நீராகாரம் கொடுத்துக் கொண்டு சோமவாரக்கட்டளையுஞ்செய்து சுவாமி எழுந்தருளிவருகிற போது திருக்கண் சாத்துதலும் நந்தவனக்கட்டளையும் நடத்திவைக் கிறதென்பதாயும் தருமம் நடக்கும்படியாய் எழுதிக்கொடுத்தோம் இந்தக் குமாரசித்த பண்டாரத்துக்கு.

இந்தப் பண்டாரத்துக்குக் காணிக்கை.

| | |
|---|---|
| பல்லக்கு வாழ்க்கையுடையவன் | பணம் 5 |
| குதிரைகட்டி வாழ்க்கையுள்ளவன் | பணம் 3 |
| பண்ணைவாழ்க்கையுள்ளவன் | பணம் 2 |
| மற்றச் செட்டுமுதல் தொழிற் செய்கிறவர்கள் | பணம் 1 |
| கல்யாண வீட்டு மாப்பிள்ளைக்கு | பணம் 2 |
| பெண் வீட்டுக்கு | பணம் 2 |

பண்டாரம் கல்யாண வீட்டு மாப்பிள்ளைக்கு ஒரு பணமும், பெண் வீட்டுக்கு ஒரு பணமும் மொய்ச்செய்கிறது.

திரட்டிக்கல்யாணத்துக்குப் பணம் 2, சீமந்தத்துக்குப் பணம் 2. இந்தப்படிக்குப் பணம் வைத்துக்கொடுத்து வருடாசலக் கட்டளையும் கொடுத்து அபிமானமாகச் சாப்பாடு பாக்கு வெத்திலையும் கொடுத்து வருவோமாகவும். இந்தக் காணிக்கை கொடாதவரையில் தடங்கல் செய்து வாங்கிக்கொள்ளவும்.

மடவாலயத்துக்கு விவாதமில்லாமல் முன்னின்று வாக்குச் சகாயம், சரீர சகாயம் செய்தபேர்களுக்கு வருகிற பலன் சண்முக

நதி, முல்லையாறு பத்தாறுயிரங்கோடி தீர்த்தமாடி ருத்திரமூர்த்தியையும், ருத்திரசாமுண்டியம்மனையும், பழநித் திருவாவினன்குடி சிவகிரித் தெண்டாயுதக்கடவுள் முதலாகிய தேவதைகளையும் தெரிசித்த பலன் பெறுவாராகவும்.

இந்தத் தரும மடவாலயத்துக்கு விவாதம் செய்தபேர் கெங்கைக்கரையில் காராம்பசுவைக்கொன்ற பாவத்திற்கு உடையாராகவும். இப்படி விவாதமில்லாமல் நடத்திவருகிறோமென்று நான்கு தேசத்து உறவின்முறையார் எழுதிக்கொடுத்தோம்.

என்னை யாளுடைய யீசனிணை யடிவாழி என்றும்
பின்னு முன்னென்னை யாண்டபெரிய நாயகியும்வாழி
தன்னிக ரில்லா உண்மைச் சண்முகக் கடவுள்வாழி
பன்னு மாமறையோர் வாழி பழநிமா நகரும்வாழி.

தெண்டாயுதபாணி துணை.

## பழநித்தலத்தில் ராய துளுவ வெள்ளாளர்

# மடத்துப்பட்டயம்.

இஃது அருப்புக்கோட்டை துளுவ வேளாள குலதிலகரும் தாயுமான சுவாமிகள் மகேசுர பூஜாலயத் தரும அமைப்பாளரும் பரிபாலகரும் பிரபல வர்த்தகருமான உயர்திருவாளர். * ந. பொன்னுச்சாமி பிள்ளையவர்கள் இற்றைக்கு 35 ஆண்டுகளுக்கு முன்னர் காஞ்சீபுரம் ஏகாம்பரர் சன்னதியிலிருந்து எழுதி வந்த பட்டய நகல்:—

பட்டயத்தில் கண்டபடி எழுதியது.

வைய நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான்றழைத் தோங்குக
தெய்வ வெண்டிரு நீறு சிறக்கவே.

கருணை பொழிதிரு முகங்களாறும் வாழி
கரகமலம் பன்னிரண்டும் வேலும் வாழி
இருசரண மென்றலைமேல் நாளுமோங்க
இந்திரவிக்கப்பாலு மினிது வாழி
அருள்பரவி யமரர் சிறை மீட்டியாண்ட
ஆறிரண்டு நயனத்தினழகும் வாழி
மருவணி பைங்கடம்பத்தார் மார்பும் வாழி
மயிற்பரி சேவற்கொடியும் வாழி வாழி

(முன் பட்டயத்தில் ஸ்ரீபுவனதகன பரமேஸ்வரர் என்பதுமுதல் வீரவாகு அருளிய பாடல் என்பது வரையுள்ளதையே இந்தப் பட்டயத்திலும் கூறியிருப்பதால் அதைச் சேர்க்காது நிறுத்தியிருக்கிறது.)

---

*ந. பொன்னுச்சாமி பிள்ளையவர்கள் அருப்புக்கோட்டை நகரத் தலைவராக (யூனியன் சேர்மென்) ஒன்பதாண்டு இருந்தவரும் தாலுக் போர்டு, ஜில்லா போர்டு அங்கத்தினராக இருந்தவரும் பிரபல நூல் வர்த்தகராகயிருந்தவரும் தரும சத்திர நிலைய அமைப்பாளருமான உயர்திருவாளர் ந. சண்முகசுந்தரம் பிள்ளையவர்களின் இளைய சகோதரராவார்கள்.

அலகி லண்டமுஞ் செலவழிந்துமற் றண்ட
ரண்டமுஞ் சண்ட வங்கிகொண்
டுலகி லும்பரும் பதமிறந்து போய்
ஒருவ ரின்றியே ஒழியு மந்தநாள்
மலர வன்சிரம் கபாலமாகியும் மாலவன்
சண்ட சூலமெய்து கொண்
டிலகு சிங்கவாள் தலைய னங்கையா
லிடம தாடியே நடன மாடினர்.

திருச்சிற்றம்பலம்.

யுகங்களின் பழுவினால் அனந்தன், அறபியன், தமந்தன், தாரியன், தண்டியன், பின்னியன், பின்னுயன், அயதன் மைதன், மணிரணன், மணியாரணன், விசுவாசுவன், விசுவக்கிரதன், அனங்கிருதன், கிரேதன, திரேதன, துவாபரன, கலியன ஆக யுகம் பதினெட்டுக்கு மேல் ஆக சம சம்புவாய ஆகாசமே பொருளாகி நின்றபடியினாலே பராபரமாகிய பரமேசுரன் தராதலம் படைக்கத் தானினைந்தருளி அனந்தனென்னும் யுகத்திலே ஆகாசத்திலே வாயு தோன்றி, வாயுவில் அக்கினி தோன்றி, அக்கினியில் அப்புத்தோன்றி, அப்புவில் பிரிதிவு தோன்றி, பிரிதிவாகிய பூலோகத்திலே மகாமேரு தோன்றி, மகாமேருவில் பாமகாயந்தோன்றி, பாமகாயத்தினால் பஞ்சமுகந் தோன்றி இதற்கு வேதம் சாட்சி.

சத்தியோசாதமாவது பிரிதிவு, இதற்குத் தெய்வம் பிரம்மதேவன். வாமதேவமுகமாவது அப்பு, இதற்குத் தெய்வம் விஷ்ணுதேவன். அகோரமுகமாவது தேய்வு, இதற்குத் தெய்வம் ருத்திரன். தற்புருஷமுகமாவது வாய்வு, இதற்குத்தெய்வம் மயேசுரன். ஈசானமுகமாவது ஆகாயம், இதற்குத் தெய்வம் சதாசிவம். இனி பஞ்சவர்ணமாவது:- பிரம்மா சிவப்பு வர்ணம், விஷ்ணு பச்சைநீல வர்ணம் ருத்திரன் மாணிக்க வர்ணம், மயேசுரன் புளு வர்ணம், சதாசிவம் பவள வர்ணம். இதற்குச் சாட்சி திருமந்திரமாமலை.

அனந்தனென்னும் யுகத்திலே ஆதிநாராயணன் பிறந்தான், அறபியனென்னும் யுகத்திலே ஆதிநாராயணரினாலே பிரம்மா பிறந்

தான், தமந்தனென்னும் யுகத்திலே பிரம்மாவினாலே வேதங்கள் பிறந்தது. தாரியனென்னும் யுகத்திலே வேதங்களினாலே தேவேந்திரன் பிறந்தான். தண்டியனென்னும் யுகத்திலே தேவேந்திரனாலே சந்திர சூரியர்கள் பிறந்தார்கள். பின்னியனென்னும் யுகத்திலே சந்திர சூரியரினாலே நவக்கிரகங்கள் பிறந்தன. அயிதனென்னும் யுகத்திலே மழையினாலே பதினெட்டுத் தானியங்கள் பிறந்தன. இந்தப் பதினெட்டுத் தானியங்களினாலே யானைமுத லெறும்பு கடையெண்பத்து நான்கு நூறாயிரம் சீவஜெந்துக்கள் பிறந்தது. மணிரணனென்னும் யுகத்திலே பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் இவை நான்கு சாதியும் பிறந்தார்கள். ஆதி ருத்திரனே பிராமணன். விஷ்ணுவே க்ஷத்திரியன். பிரம்மாவே வைசியன். தேவேந்திரனே சூத்திரன். மணியாரணனென்னும் யுகத்திலே பதினெட்டுத் தானியங்களினாலே பதினெட்டுச்சாதி முகம் பிறந்தது. ஆகையாலே இவர்களுக்குப் போக போக்கியங்களை யநுபவிக்க ஆறு தெரிசனம் உற்பவித்தது. இந்த ஆறு தெரிசனமும் எப்படியென்னில் ஆதியு மந்தமுமில்லாத பரப்பிரம்ம மூர்த்தி ஆறுசமயமானதெப்படியென்னில், சுப்பிரமணியசுவாமிக்கு ஆறு முகத்துக்கும் திருமேனி ஒன்றாகநின்ற தன்மைபோலவும் இந்த ஆறு தெரிசனத்தினாலே தீர்த்தங்கள் பிறந்தது. விசுவாசனென்னும் யுகத்திலே தீர்த்தங்களினாலே தர்க்கங்கள் பிறந்தன, விசுக்கிரதனென்னும் யுகத்திலே தர்க்கங்களினாலே புண்ணிய பாவங்கள் பிறந்தன, அனங்கிருதனென்னும்யுகத்திலேபுண்ணிய பாவங்களினாலே தானதருமங்கள் பிறந்தன, கிரேதனனென்னும் யுகத்திலே தானதருமங்களினாலே போக போக்கியங்கள் பிறந்தன. திரேதனனென்னும் யுகத்திலே போக போக்கியங்களினாலே சுகதுக்கம் பிறந்தன, துவாபரனென்னும் யுகத்திலே சுகதுக்கத்தினாலே செனன மரணமுண்டாச்சுது. கலியனென்னும் யுகத்திலே செனன மரணங்களினாலே சத்தியமசத்தியமுண்டாச்சுது. சத்துக்குமசத்துக்கும் பூலோகத்துக்கதிபதியாகிய சுப்பிரமணியமூர்த்தி ஆராறுநூறு அட்டமங்கல ஆவினன்குடி பழநிக்கதிபன், பன்றிமலை பூம்பாரை பழநிமலைக் காவலன், எண்மலை இடும்பன்மலை ஈராறெனும்பள்ளி இலங்கும் வைகாவூர்நாட்டுக் கிறைவன், வடவாழி சின்னாபன், மனங்குடி கொண்டவனாகிய பதிவிரதம் திருப்பரங்குன்றமும் சீரலைவாயும் திரு

வாவினன்குடியும் திருவேரகமும் குன்றுதோராடலும் பழமுதிர் சோலையும் ஆகப்பதியாகிய ஆறு திருப்பதியிலும் எழுந்தருளிய, தில்லை திருவண்ணாமலை திருவேங்கடம் திருக்காளாஷ்திரி காஞ்சீவரம் திருத்தணிகை என்னும் பிறப்பதியாகிய ஆறு திருப்பதியிலும் எழுந்தருளி மகாபூஜைகொண்டருளாநின்ற சுப்பிரமணியசுவாமிக்குத் துளுவ பக்தசனமாகிய உறவின்முறையாரனைவருங்கூடி எழுதிக் கொடுத்த தருமசாதனப் பட்டயமாவது.

சுபஸ்ரீ மகாமண்டலீசுரன் ஆரியதளவிபாடன் பாசைக்குத் தப்புவராயகண்டன் மூவராயகண்டன் கண்டநாடுகொண்டு கொண்ட நாடு கொடாதான் ஒட்டிய மொகாவிழ்த்தோர் இம்மண்டலமும் ஈளமுந் திறைகொண்டருளிய ராஜாதிராஜன் ராஜமார்த்தாண்டன் ராஜ பரமேசுரன் ராஜகெம்பீரன் ராஜ உத்துங்கன் ராஜ புங்கவன் ராஜ கேசரி வங்காள சிங்காள மாாடர் ஒட்டியர் சோனகர் கானகர் பாாக் கதர் குச்சிராாரியர் மலையாளர் மஷதகுடோரி பூலோக புரந்தார் அசுபதி கெஜபதி நாபதி நவகோடி நாராயணன் உத்தா தெட்சண பூருவ பட்சண சப்த சமுத்திராதிபதி சேரன் சோளன் பாண்டியன் அச்சுத ராய வல்லாளராய பயங்கரன் ஈளமும் இலங்காபுரியும் வாழ வழி தீர்ந்த பெருமான் மதியாத மன்னரை மகுடஞ்சிதைத்துப் பதிசூரை கொள்ளும் பரசுராமன் அட்டதிக்கு மனோபயங்கரன் சமரங்கண்டு முதுகிடுவார்கண்டன் நாகலோக சக்ரவர்த்தி நாகலோக சூரியன் கெஜதளவிபாடன் கெஜதள வேட்டைகொண்டருள் வாலஸ்ரீ வீர சிம்மாசனத்தில் பிரதாபேசுரனுகை வீற்றிருந்தருளிய பிரபுடமகாதேவ ராயர் வீரவசந்தராயர் நரசிங்கராயர் விருப்பாட்சிராயர் மகாதேவ ராயர் மல்லிகார்ச்சுனராயர் சதாசிவராயர் அச்சுதராயர் வல்லாள ராயர் கொப்புலிங்கராயர் ஆனைகுந்தி வெங்கிடபதிராயர் புஜபெல ராயர் ராமதேவராயர் சீரங்காராயர் திருமலைராயர் துளுவகிருஷ்ண மகாதேவராயர் கரிமேலுதையன் பரிக்கு நகுலன் வில்லிலே விஜயன் சொல்லிலே தருமன் ஒளிக்குக் கதிரோன் அளிக்குச் சந்திரன் வாளுக்கு வீமன் பொருமைக்குப் பூமாதேவி அறிவுக்கு அகத்தியன் தபசுக்கு வசிஷ்டன் நிலைக்கு அரிச்சந்திரன் இவ்வைபவத்தோடு மருளாநின்று உணர்ந்து உலகமுழுதும் ஒருகுடைக்குள்ளாண்டு

வேதவேள்வியும் விளங்க வீதியும் அந்தணர் கூட்டமும் யாகசாலையும் சைவநெறியுந் தபோதனர் விலாசமும் இவை முதலான பலவித நன்மையும் அசையாமணிகட்டிக் காந்த பாலைக் காகந்தொடாமல் பதினெட்டாயுதத்தொழில் பிறவியற்றி அல்லவைகடிந்து நல்லவைநாடி எத்திசையனைத்துஞ் செங்கோல் செலுத்தி ஆறிலொரு கடமை கொண்டு இப்படித் துட்டநிக்ரக சிட்டபரிபாலனஞ்செய்து சிம்மாசன ரூடராய் ராஜ்யபரிபாலனம்பண்ணுநின்றநாளையிலே சாலிவாகன சகாப்தம் 1674, கலியுகம் 4853. இதற்கு மேற்செல்லாநின்ற ஆங்கிரசஹு தைமீ 10உ குருவாரமும் பௌரணையும் பூச நட்சத்திரமும் சுபகரணமுங்கூடிய சுபதினத்தில் ஸ்ரீவீர பழநிமலை வேலாயுதச் சுவாமியாருக்குப் பிரிய பக்தசனமாகிய துளுவகுல ராயருடைய விருதுபாடல்:- விசையமார்த்தாண்டன் விசையநாராயணன் விசைய உத்தண்ட கோலாகல ராயர் ஒட்டியதளவிபாடன் ஒட்டிய மொகரந்தவிழ்த்தோர் துலுக்கர் தளவிபாடன் துலுக்கர் மொகரந்தவிழ்த்தோர் ஆனைகுந்தி வங்கிஷத்தான் கள்ளநாடு காவலர் நகரிகாவலர் கன்னி காவலர் தொழும்பரை வலக்கை வீரவாளினால் வென்றோர் அங்கவடிமிசை வையத்தெழுமங்கையர் மணவாளர் அஸ்வங்கடால் வாரணடால் அனுமந்தடால் வெள்ளைடால் வெள்ளைக்குடை குடைமேற்குடை டவண்டை மல்லாரி மகர தோரணம் மட்ச தோரணம் புலித்தோலும் வெண்சாமரையும் வெட்டுப்பாவாடை நாகசுர மேளமும் உடையார் அண்டத்தோர்கண்டார் அஞ்சலார் மிண்டராய சிங்காசனத்தலைவர் பெருமணிநாக பிரபல ஈசுரரிசைவளத் தோரணத்தோர் ஈட்ட ஈட்டிக்கு எதிரீட்டியால் வந்தோர் சாம்பிராணி வாசனை படைத்தோர் பாலாறு கம்பையாறு செய்யாறு படைத்தே துளுவர் நாட்டுக்கதிபர் விசையநகரம் பிறந்தோருக்கு நெய்தலமாவீகாரணரான பச்சைக்குதிரையும் வெள்ளையானையும் வாள்க்கொடியும் படைத்தோராய பேரிகை முரசு பெற்றோர். ருத்திரசாமுண்டி அம்மன் வேர்வையிலே துள்ளியெழுந்த துளுவகுலராயர், துளுவ வெள்ளாளர், துளுவ காராளர், துளுவ-வல்லவர், துளுவ நாயக்கருடைய தருமம்.

பழநித் தலத்திலே ராஜ வீதியிலே திருத்தொடியில் கயிலாச நாதர் பெரியநாயகியம்மன் சன்னதிக்கு முன்பதாகத் திசகம்பத்துக்குத் தெட்சணபாரிசம் வண்டிக்கால் புளியமரத்துக்குத் தெற்கு, ரெட்டியார் மடத்துக்குக் கிழக்குப்பாரிசமாகிய திருமடம் தருமம் நடந்துவரத்தக்கதாக.

சாரங்க சாமியாருடைய சீடன் குருநாத பண்டாரத்தின் குமாரன் பழநிப்பண்டாரத்திற்கு வருடாசலக்கட்டளைப் பட்டயம் எழுதிக் கொடுத்தபடி காஞ்சீவரம் படைவீடு கரைதுறை திருப்பதி தொண்டநாடு சென்னப்பட்டணம் சீரங்கபட்டணம் புதுச்சேரி தேவனுபட்டணம் கூடலூர் நாகூர் நாகபட்டணம் தனித்திருவண்ணுமலை ஆறணி ஆற்காடு செஞ்சி தஞ்சாவூர் திருச்சினப்பள்ளி மதுரை திருநெல்வேலி இராமேசுரம் இராமனுதபுரம் தெட்சணபூமி தர்மபுரி அஞ்சொடி ஆலம்பாடி தீர்த்தகிரி செங்கமா காவேரிப்பட்டணம் கம்பயனூர் தென்கரைக்கோட்டை பாலக்காடு பேட்டை கொச்சி கோழிக்கூடு ஆறனுடு வார்க்கநாடு குங்கிலிக்கநாடு குரிப்பநாடு ஒடுவங்கநாடு காஞ்சிகோயில்நாடு வடகரைநாடு மேல்கரை பூந்துறைநாடு கீழ்கரை பூந்துறைநாடு காங்கயநாடு தென்கரைநாடு வைகாவூர் அண்டநாடு அடுத்தநாடு தட்டையநாடு அரையநாடு தலையநாடு மணநாடு கிளங்கநாடு வெங்கலநாடு பூவாணிநாடு வீரசோளபுரநாடு ஏழூரும் எதிரானநாடு பருத்திப்பள்ளிநாடு வாழவந்திநாடு ராசிபுரநாடு பக்கநாடு துளுவநாடு வையநாடு விதுரூர்க்கடல் கரைசேர்ந்தநாடு அடையநாடு தென்கரைநாடு திரிகுல பருவதஞ்சேர் காவேரிநாடு எழுமலை துருவஞ்சேர்ந்த எதிரானநாடு விரிஞ்சிபுரம் வேலூரு கலசபாகங்கூடிய உறவின்முறையார் முதல் கொங்கு இருபத்துநாலுநாடு அன்பத்தாறு தேசம் நாலு சப்தசாகரங்கூடிய உறவின்முறையாரனைவருங்கூடி எழுதிக்கொடுத்த தர்மசாதனப் பட்டயமாவது:-

இந்தத் தர்மம் நடக்கும்படிக்கு ஐந்தலை நாகமானது ஐந்து வாயிலும் இரையெடுத்து ஒரு மிடரிலே இரக்கினற்போலே தலைக் கட்டுக்குப் பணம் ஒன்று, கல்யாணத்துக்குப் பணம் இரண்டு. இந்தப்படிக்குச் சந்திரன் சூரியன் கல்லுங்காவேரியும் புல்லும் பூமியுமுள்ள வரைக்கும் புத்திர பாக்கியங்களுண்டாகக் கட்டளையிட்டோம்.

பண்டாரத்தையும் பட்டயமுங் கண்டபோதே நம்மிட பண்டாரமும் பட்டயமும் வந்தாரென்று தன் பிள்ளையாய்ப்பாவித்து இனியது கொடுத்து அந்த ஊரிலேயிருக்கிற உறவின்முறையிலே ஏழையாயிருந்தாலும் அவனுக்கேற்ற பிரியவசனம் போதித்து துட்டனாயிருந்தாலும் அவன் மனதிலே இந்தத் தர்மத்தைப்போதித்து நம்மிட சாதிக்குள்ளே ஒருவர் பெரியவராயிருந்து இந்தத் தர்மத்தைப் பரிபாலனஞ் செய்யவேண்டும்.

இப்படிப் பரிபாலனஞ் செய்தபேருக்கும் தண்டிக்கொடுத்த (வாங்கிக்கொடுத்த) பேருக்கும் பட்டயத்திலுண்டானபடிக்குச் சாப்பாடு தீர்த்தமும், பணமும் பாக்கு வெற்றிலேயும் கொடுத்தபேருக்குக் காசியிலே தீர்த்தமாடி காசி விசுவனாதரையும் விசாலாட்சியம்மனையுந் தரிசித்த பலன் பெறுவார்கள். தனுஷ்கோடியிலே தீர்த்தமாடி இராமலிங்கநாதரையும் பருவதவர்த்தனியம்மனையும் தரிசித்த பலன் பெறுவார்கள். மதுரை வைகையிலே தீர்த்தமாடி சொக்கலிங்கத்தையும் மீனாட்சியம்மனையும் தரிசித்தபலன் பெறுவார்கள். சிதம்பரத்திலே சிவகெங்கையிலே தீர்த்தமாடிச் சிதம்பரேசுரனையும் சிவகாமியம்மனையும் தரிசித்த பலன் பெறுவார்கள். காஞ்சியிலே சர்வ தீர்த்தத்திலே தீர்த்தமாடி ஏகாம்பர ஈசுரனையும் கச்சி ஈசுரனையும் வரதராஜரையும் தெரிசித்த பலன் பெறுவார்கள். திருப்பதியிலே கபிலி தீர்த்தம் ஆழ்வார் தீர்த்தத்திலே தீர்த்தமாடிகபிலே ஈசுரனையும் கபிலே மாமுனியையும் ஆழ்வாரையும் தெரிசித்து கோவிந்தராஜரையும் தெரிசித்த பலன் பெறுவார்கள். மேலேத்திருப்பதியிலே கோனேட்டி தீர்த்தத்திலே தீர்த்தமாடி வெங்கடாசலப் பெருமாளையும் அலமேலுமங்கைத் தாயாரம்மாளையும் தெரிசித்த பலன் பெறுவார்கள். காளாஷ்திரியிலே நதியிலே தீர்த்தமாடி காளாஷ்திரி நாதரையும் ஞானம்மாளையும் எச்சிலிட்டு முத்திபெற்ற கண்ணப்பரையும் தரிசித்த பலன் பெறுவார்கள். விரிஞ்சிபுரத்திலே பாலமா நதியிலே தீர்த்தமாடி மார்க்கசகாயரையும் மரகதவல்லியம்மனையும் தெரிசித்தபலன் பெறுவார்கள். அருணாசலத்திலே அக்கினி தீர்த்தத்திலே தீர்த்தமாடி அண்ணாமலேயாரையும் உண்ணாமுலேயம்மனையும் தெரிசித்த பலன் பெறுவார்கள். பழநி வைகாபுரிநதி, இடும்பநதி, சண்முகநதி, சரவணப்பொய்கை

மற்றுமுண்டாகிய ஆறு நதியிலும் தீர்த்தமாடிக் கயிலாச நாதரையும் பெரியநாயகியம்மனையும் தெரிசித்த பலனைப்பெற்று நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் மார்க்கண்டாயுளாகயிருப்பார்களென்று சொல்ல ஒப்பு உண்டாகிய உறவின்முறையார் ஐம்பத்தாறு தேசத்திலுண்டாகிய ராய துளுவ நாயக்கபாடிய ளனைவர்களுங்கூடி ஸ்ரீவீர பழநிமலை வேலாயுதச்சுவாமியார் சன்னதியிலே எழுதிக்கொடுத்த மட தர்மசாதனப் பட்டயமாவது:-

இந்தத் தர்மத்துக்கு அகடவிகட சாமார்த்தியம்பண்ணினால் கீழவூருக்கு மேலவூர் சொல்லவும், மேலவூருக்கு கீழவூர் சொல்லவும் வீடுபுகுந் தடவுயெடுக்கவும் அங்கேயுண்டாகிய உறவின்முறையார் அவனை ஏதென்று தண்டித்து வந்த பண்டாரத்துக்குப் பணமும், பாக்கு வெத்திலையும் வாங்கிக்கொடுக்கவும் சாதியார்பார்த்து தருமம் நடத்தவும்.

தப்பாதே இந்தத் தருமத்துக்கு அகடவிகட சாமார்த்தியம் பண்ணினபேர்கள், அலைச்சல்கண்டபேர்கள், கொடாதபேர்கள், கெங்கைக்கரையிலே காராம்பசுவைக்கொன்ற பாவத்திலே பஞ்சமகா பாவஞ்செய்த நரகத்திலே போவார்களென்று ஒப்பு உண்டாகி உறவின்முறையாரனைவருங்கூடி எழுதிக்கொடுத்த மட தர்மசாதனப் பட்டயம்.

ஆரணத் துரையே வாழி
யாகமெய்ப் பொருளே வாழி
காரணக் குருவே வாழி
காட்சிநன் னிலையே வாழி
வாரண வனிதைக் கேற்ற
மகிணனே வாழி வாழி
பாரினி லுயர்ந்த செல்வப்
பழநியம் பதியா வாழி.

திருச்சிற்றம்பலம்.

# மரகத விநாயகரின் மூல வரலாறு.

நாம் சமீபத்தில் நாகர்கோவில் கோட்டார் சென்றிருந்தபோது வடசேரி நமது திருவாளர். சு. சோ. சுப்பய்யா பிள்ளையவர்களிடத்தில் 'கொல்லந்தோன்றிய கோட்டாற்று மரகத விநாயகர்' என்பதின் விபரமென்னவென்று கேட்டதற்கு அவர்கள் கூறியதாவது:—

துளுவநாட்டிலிருந்த காலத்தில் நம்முன்னோர்கள் பூஜைக்குரிய சாளக்கிராமம் மரகதத்தினால் விநாயகர் கிடைக்கப்பெற்று அதை வைத்து வழிபாடியற்றி வருங்காலத்தில் மதமாற்றத்தார்களின் நிர்ப்பந்தத்தால் வருத்தமுற்று அவ்விநாயகரை பேழையில்வைத்து கடலில் போட்டுவிட்டு அங்கு வாழ மனமின்றி மலையாள நாட்டையடைந்து கோட்டாறுக்கு வடபால் 6-மைல் தூரமுள்ள செம்பாரான் என்னும் ஒரு சிறு கிராமத்தில்தங்கி வாழ்ந்துவந்தார்கள். அப்போது அப்பேழை கொல்லம் கடற்கரைப்பக்கம் வரக்கண்டதை மீன் வலைஞர்கள் எடுக்கச்சென்றபோது அகப்படாமல் விலகிப்போவதும் அப்பால் கடற்கரையோரமாக வருவதுமாகவிருப்பதை அரசருக்குத் தெரிவிக்க, அரசரும் வந்து பார்த்து எடுக்கச்சென்றபோது அகப்படாது விலகிப்போவதுகண்டு ஆச்சரியமுற்று தன் நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கும் கொல்லம் கடற்கரைப் பாகத்தில் காணும் பேழையை எடுப்பவர்களுக்கு தக்க நிலங்கள் இனாமாகக் கொடுப்பதெனப் பறையறைவிக்கச் செய்தார். அதன்படி எல்லா ஊர்களிலிருந்தும் மக்கள் கூட்டத்தினர் சென்று அரசன் அநுமதிபெற்று பேழையை எடுக்கச்சென்றபோது, அகப்படாது விலகிச்சென்றது. கடைசி முறையாக நம் பெரியார் பிரிந்துபோன தாயினைக்கண்ட சேயைப்போன்று ஆனந்தக்கண்ணீர் சோர அரசன்முன் சென்று விடைபெற்று பக்தி மேலிட்டவராய் நீரில்நின்று கைகூப்பி வணங்க,

அப்பேழையும் அருகில் நெருங்கிவரவும் இருகரத்தாலும் அதனை யேந்திக் கரையேற அங்குற்ற எல்லா மக்களும் ஆச்சரியமும் ஆனந்தமுமடைந்தார்கள். அரசரும் பேழையைத் திறக்கச்செய்து மரகத விநாயகரைக் கண்டு வணங்கி, ஆனந்தமுற்றவராய் இடலாக்குடியில் ஆலயத்துக்கு இடமும் விட்டு 60-எக்கர் நிலங்களும் தந்துள்ளார். அதன்படி ஆலயம் அமைத்து துளுவநாட்டிலிருந்து வந்ததின் அடையாளமாக துவாரகாபதி விநாயகர் என அமைத்திருப்பதாக எனது தந்தையாருக்கு எனது பாட்டனாரும், அவர்களுக்கு அவர்கள் பெரியோரும் சொன்னதாகவும் செப்பரான் என்னும் கிராமம் இப்போது இல்லையென்றும், கொல்லத்தில் தோன்றி கோட்டாற்றில் ஆலயம் அமைத்திருப்பதால்தான் 'கோல்லந்தோன்றிய கோட்டாற்று மரகத விநாயகர்' எனச் சொல்லப்படுவதென்றும் கூறினார்கள்.

மேற்கண்ட துவாரகாபதி விநாயகர் சன்னதியில் நமது சமூக மக்கள் வாழும் பரசுராமன் பெருந் தெருவில் நாட்டப்பட்டுள்ள சிலா சாசனத்தையும் காண்பிக்கப் பார்த்தோம். அதற்குப் பிரதி ஒன்று தருவதாய் கூறியுள்ளார்கள். அதனை பிந்திய வெளியீட்டில் பதிப்பிக்க உத்தேசித்துள்ளேம். 42 ஊர் உறவின் முறையில் கொல்லந் தோன்றிய கோட்டாற்று மரகத விநாயகர் திருவருளினாலே என்று திருமுகம் எழுதுங் காலத்தில் எழுதிவருவதைப் பார்க்குங்கால் இவ் விபரம் சிலகாலத்துக்கு முன்னரே தெரிந்திருக்கக் கூடுமென்று அறியவேண்டியதிருக்கிறது. திருமுகம் என்பது உறவின்முறைக்கு உறவின்முறை எழுதும் தகவல்கள்.

துளுவ வேளாளர் வரலாறும் பட்டயங்களும் அச்சியற்றியபின் 10—11—33ல் கோட்டார் சென்றிருந்தபோது தெரிந்துள்ளதால் "மரகதவிநாயகரின் மூலவரலாறு" என பின்னால் சேர்த்து பதிப்பிக்கப் பெற்றது.

மரகத விநாயகன் திருவருள் துணை.

ராஜா பிரஸ், வடக்குச்சித்திரைவீதி, மதுரை:—33.

# பின்னுரை.

பெரியீர்,

இவ்வரலாற்றினைக்கலி 4515-ம் வருடப் பட்டயத்தைத்துணைக் கொண்டு தெரிந்த அளவில் எனது அறிவுக் கெட்டியவரை எழுதியுள்ளேன். தொண்டமண்டலம் முதலிய பல இடங்களில் ஆராய்ச்சியில் வல்ல பேரறிஞர்களாக நம் பெரியார் பலரிருக்க நான் வரலாறு எழுத முன் வந்ததற்குக்காரணம் மரபினிடத்துக் கொண்ட பேரவாவும் நண்பர்கள் விருப்பமுமேயாகும்.

இதில் விரிவாக எடுத்துக்காட்டத்தக்கவிடங்கள் பலவுள, இருப்பினும் காலப்போக்கைத் தழுவியும், வரலாறுபற்றித் தக்க ஆதாரங்கள் கிடைப்பின் அவற்றைக்கொண்டும் ஆராய்ச்சியில் வல்ல நம் பெரியார்களையணுகித் தெரிந்தும் விரிவான முறையில் பின்னரொன்று வெளியிட வேண்டுமென்னுங் கருத்துக்கொண்டு சுருக்கமாக இதனை வெளியிட்டுள்ளேன் குற்றமிருக்கின் மன்னிக்குமாறு வேண்டுகிறேன்.

இவ்வரலாற்றை அச்சியற்றியபின் இரண்டோரிடத்தில் ஆதாரங்களிருப்பதாகக் கேள்விப்படுகின்றேன். அவற்றையும் மற்றும் பல அறிஞர்களிடத் திருப்பினவ்வாதாரங்களையும் எனக்கு அனுப்பித்தந்தால் அதனையும் அச்சிட்டு வெளியிடுவதோடு அங்ஙனம் உதவிய கண்ணியம் வாய்ந்த அறிஞர்களுக்கு எனது முழுவணக்கத்தையும் செலுத்தக்கடப்பாடுடையவனாக இருக்கின்றேன்.

இங்ஙனம்,

தங்களன்பன்,

**ராம. மா. இராமையாபிள்ளை,**

கான்பாளையம் 1-வது தெரு,

மதுரை.

# துளுவ வேளாள மகாஜன சங்கம்.

அன்புடையீர்.

தமிழ் நாட்டில் பல லட்சக்கணக்காக நமது சமூக மக்கள் பற்பலவிடங்களில் வசித்து சில பாகங்களில் கல்வி, செல்வம், நா ரீகம், ஒற்றுமை முதலியன வளம் பெற்றும் பல பாகங்களில் வ மில்லாமையுமாயிருப்பதறிந்ததன்றோ. நமது சமூக மக்கள் எல்ல வளங்களிலும் சிறப்புற்று விளங்க ஒரு ஸ்தாபனமிருப்பின் அதன் மூலம் தொண்டாற்றி கருதிய நோக்கம் கைவரப்பெறலாமென்ப அறிஞர்களறிந்ததோர் உண்மை.

இந்நோக்கங்கொண்டே திருவாளர். ராம. மா. இராமைய பிள்ளையவர்களால் 1919-ல் 42 வூர் துளுவ வேளாள வாலிப சங்கம் நிறுவப்பெற்றும், அப்பால் 1924-ல் 42 வூர் துளுவ வேளா சங்கம் என அமைத்தும், பல பிரசுரங்கள் வெளிவந்ததுடன் 42 வூர் உறவின்முறையைப் பொருத்த அளவில் மகாநாடு கூட்டி சில திருத்தங்களும் ஒற்றுமையையும் உண்டுபண்ணப்பெற்றன. இப்பால் 1932-ல் தமிழ் நாட்டிலுள்ள நமது சமூக மக்கள் எல்லா ருக்கும் பொதுவாக துளுவ வேளாள மகாஜன சங்கம் என அமைத்து பல அங்கத்தினர்களும் சேர்க்கப்பெற்றிருக்கிறது சேலம், தஞ்சை, தூத்துக்குடி, நாகர்கோவில் முதலியவிடங்களி லுள்ள பிரபல அறிஞர்களும் இதனை ஆதரித்து இதன் அபிவிர்த் தியில் ஆர்வமிகுந்த கவனமுடையவர்களாகவிருக்கிறார்கள்.

இதற்கு வருஷச்சந்தா ஒரு ரூபாயாக ஏற்படுத்தியிருக்கிறது. ஆகையால் நமது சமூக மக்கள் ஒவ்வொருவரும் சங்கத்தில் அங்கத்தினராகச்சேர்ந்து சங்க நோக்கத்தை பூர்த்திசெய்ய வேணுமாய்க் கோருகிறோம்.

"சங்க வளர்ச்சியே சமூக வளர்ச்சியாகும்."

ராம. ச. சோமசுந்தரம் பிள்ளை, தலைவர்.
வி. எஸ். இராமசாமி, காரியதரிசி.
A. மாரியப்பன், பொருள் பாதுகாப்பாளர்.

துளுவ வேளாள மகாஜன சங்கம்,
47, இராமநாதபுரம் ரோட், மதுரை.